474

TNLA Debates

Official Report
9 MAY

Vol. 43 NO. 4

1987

V211,31 N87
N87.43:4
98797

C

வெளியீடு 21-11-1987 Issued 21-11-1987

529/AL/88

474

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

சனிக்கிழமை மே 9, 1987—தொகுதி 43 எண் 4

Saturday the 9th May 1987—Volume 43 No. 4

· மன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
L. .lative Assembly Secr..ariat, Fort St. George,
M..

விலை ரூ. 3] [Price Rs. 3

98797

## உள்ளடக்கம்

9—5—1987


| | | பக்கங்கள். |
|---|---|---|
| 1. | வினாக்கள்—விடைகள்— உடுக்குறியிடாத வினாக்கள் | 685—708 |
| 2. | இரங்கல் தீர்மானம்— உறுப்பினர் திரு. வி. பி. சிந்தன் மறைவு குறித்து | 708—728 |
| 3. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 728 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

1987, மே 9, சனிக்கிழமை.

சித்திரை 26, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10–00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

474

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

,,நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு?'

நேற்று இருந்தவன் ஒருவன், இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமை உடையது இவ்வுலகம்.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிடாத வினாக்கள்.

### மண்டைக்காடு ஏவி. எம். கால்வாயை தூர் எடுக்கும் பணி.

1—வினா எண். 2871—திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டத்தில் மண்டைக்காடு கடலோரமுள்ள ஏவி. எம். கால்வாயை தூரெடுக்கும் பணி முடிவுறாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இப்பணியை துரிதப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) குருத்தங்கோடு ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மண்டைக்காடு ஏவி. எம். கால்வாய் பராமரிப்புக்காக கீழ்க்கண்ட செலவினம் செய்யப்பட்டுள்ளது.

| ஆண்டு. | செலவினம். | திட்டத்தின் பெயர். |
|---|---|---|
| 1983–84 | ரூ. 2,87,410 | தே.ஊ.வே. திட்டம். |
| 1984–85 | ரூ. 12,327 | தே.ஊ.வே. திட்டம். |
| 1985–86 | ரூ. 24,731 | குருத்தங்கோடு ஊராட்சி ஒன்றிய நிதி |

1985–86ஆம் வருடத்தில் குருத்தங்கோடு ஒன்றியத்தின் பொதுநிதியிலிருந்து ரூ. 24,731 செலவு செய்து கால்வாய் தூர் எடுக்கும் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

**காமராசர் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சிறிய தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம் மற்றும் தீப்பெட்டி தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கம்.**

2—வினா எண். 2486—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காமராசர் மாவட்டத்தில் 1977 முதல் 1984 முடிய எத்தனை சிறிய தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவை தொழில் கூட்டுறவுச் சங்கம், தீப்பெட்டி தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டன ?

(ஆ) இதில் எத்தனை சங்கங்கள் செயல்படாமல் இருக்கின்றன ?

விடை—

(அ) காமராசர் மாவட்டம் 15–3–1985-ல் அமைக்கப்பட்ட பொழுது இந்த மாவட்டத்தில் 21 தீப்பெட்டி சேவை தொழில் கூட்டுறவுச் சங்கங்களும், 70 தீப்பெட்டி தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களும் பதிவு செய்யப்பட்டு இருந்தன. அதன்பின், இதுவரையில் புதிதாக சங்கம் எதுவும் பதிவு செய்யப்படவில்லை.

(ஆ) இம்மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட 21 தீப்பெட்டி சேவை தொழில் கூட்டுறவுச் சங்கங்களில் 6-ம், 70 தொழிலாளர் தொழில் கூட்டுறவுச் சங்கங்களில் 65–ம் செயல்படாத நிலையில் உள்ளன.

**ஓமலூர் வட்டத்தில் கான்கிரீட் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைத்தல்.**

3—வினா எண். 4719—திரு. கே. அன்பழகன் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், கமலாபுரம், நடுப்பட்டி ஆகிய இடங்களில் பழுதடைந்துள்ள இரும்பு தண்ணீர் டேங்குகளை (Iron water tanks) மாற்றி கான்கிரீட் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?



விடை—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டத்தில் உள்ள கமலாபுரம் மற்றும் நடுப்பட்டி குடியிருப்புகளில் பழுது அடைந்துள்ள இரும்பு மேல்நிலைத் தொட்டிகளுக்குப் பதிலாக சிமெண்ட் கான்கிரீட் மேல்நிலைத் தொட்டி அமைக்கும் பணி நடப்பு நிதியாண்டிற்குள் நிறைவேற்றப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**திருச்சி நகரில் உணவு விடுதிகளில் கலப்படம் குறித்து பதிவு செய்யப்பட்ட வழக்குகள்.**

4—வினா எண். 5142—திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி நகரில் உணவு விடுதிகளில் நகரசபை அலுவலர்கள் கலப்படம் எனக்கூறி எடுக்கப்பட்ட உணவு மாதிரிகள் 1983–84, 1984–85 ஆண்டுகளில் எவ்வளவு ?

(ஆ) இது சம்பந்தமாக எவ்வளவு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) திருச்சி நகரில், உணவு விடுதிகளில் நகரசபை அலுவலர்கள் கலப்படம் எனக்கூறி எடுக்கப்பட்ட உணவு மாதிரிகளின் எண்ணிக்கை பதிவு செய்யப்பட்ட வழக்குகள் பற்றிய விவரங்கள் கீழ் வருமாறு :—

| ஆண்டு. | எடுக்கப்பட்ட உணவு மாதிரி வகைகளின் எண்ணிக்கை. | பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை. |
|---|---|---|
| 1983–84 | 15 | 11 |
| 1984–85 | 15 | 8 |

**1983–84, 1984–85, 1985–86 ஆண்டுகளில் வழங்கப்பட்ட அரிசி.**

5—வினா எண். 6700—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1983–84, 1984–85, மற்றும் 1985-86 ஆம் ஆண்டுகளில் தமிழக அரசு கேட்ட அரிசி எவ்வளவு ?

(ஆ) வழங்கப்பட்ட அரிசியின் அளவு எவ்வளவு ? அதன் விலை என்ன ?

விடை—

(அ) 1983 ஆம் ஆண்டு 11,00,000 டன்கள் அரிசியும் 1984ஆம் ஆண்டு 12,49,000 டன்கள் அரிசியும் 1985 ஆம் ஆண்டு 7,25,000 டன்கள் அரிசியும், 1986 ஆம் ஆண்டு டிசம்பர் முடிய 12,00,000 டன்கள் அரிசியும் கேட்டுள்ளது.

(ஆ) 1983 ஆம் ஆண்டு 2,45,000 டன்கள் அரிசியும், 1984 ஆம் ஆண்டு 3,35,000 டன்களும், 1985 ஆம் ஆண்டு 4,55,000 டன்களும், 1986 ஆம் ஆண்டு 7,00,000 டன்கள் அரிசியும் மையத் தொகுப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டது. வழங்கப்பட்ட அரிசியின் விலை வருமாறு :

ரகம்

| காலம். | சாதாரணம் | சன்ன ரகம் | மிகச் சன்ன ரகம் |
|---|---|---|---|
| | (குவிண்டாலுக்கு விலை) | | |
| 1-10-82 முதல் 15- 1-84 வரை | ரூ. 188 | ரூ. 200 | ரூ. 215 |
| 16- 1-84 முதல் 9-10-85 வரை | ரூ. 208 | ரூ. 220 | ரூ. 235 |
| 10-10-85 முதல் 31- 1-86 வரை | ரூ. 217 | ரூ. 229 | ரூ. 244 |
| 1- 2-86 முதல் 30- 9-86 வரை | ரூ. 231 | ரூ. 24[illegible] | ரூ. 258 |
| 1-10-86 முதல் இன்றுவரை | ரூ. 239 | ரூ. 251 | ரூ. 266 |

### 1985 ஆம் ஆண்டு பாரதப் பிரதமர் தமிழ்நாட்டிற்கு வந்தபொழுது செலவிடப்பட்ட தொகை.

6—வினா எண். 6885—திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1985-ம் ஆண்டு ஜூலை மாதம் பாரதப் பிரதமர் தமிழ்நாட்டிற்கு காங்கிரஸ் நூற்றாண்டு விழாவில் கலந்துகொள்ள வந்தபொழுது அவருடைய பாதுகாப்பிற்காக தமிழக அரசு செலவு செய்த தொகை எவ்வளவு ?

விடை—

1985-ம் ஆண்டு ஜூலை மாதம் பாரதப் பிரதமர் அவர்கள் காங்கிரஸ் நூற்றாண்டு விழாவில் கலந்துகொள்ள வந்தபொழுது அவருடைய பாதுகாப்பிற்காக தமிழக அரசுக்கு நேரிட்ட செலவினம் ரூ. 2,62,688 (ரூபாய் இரண்டு லட்சத்து அறுபத்திரண்டாயிரத்து அறுநூற்று எண்பத்து எட்டு மட்டும்) ஆகும்.



### திண்டுக்கல்-ஆலம்பட்டிக்கு பாண்டியன் போக்குவரத்துக் கழக பேருந்து விடல்.

7—வினா எண். 6904—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல்-ராகலாபுரம், செங்குறிச்சி, ஆலம்பட்டிக்கு பாண்டியன் போக்குவரத்துக் கழகப்பேருந்து விட அரசு முன்வருமா ?

விடை—

திண்டுக்கல்லிலிருந்து ஆலம்பட்டிக்கு செங்குறிச்சி வழியாக 13-9-86 முதல் இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகம் நகரப்பேருந்து ஒன்றை இயக்கி வருகின்றது. திண்டுக்கல்லிலிருந்து ராகலாபுரம் வழியாக பேருந்து செலுத்த தனியார் நிறுவனத்திற்கு ஏற்கனவே உரிமம் வழங்கப்பட்டுள்ளது.

### வாசுதேவநல்லூர் அருகே பாலம் கட்டும் பணி.

8—வினா எண். 7748—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்காசி-ராஜபாளையம் சாலையில் வாசுதேவநல்லூர் அருகே கட்டப்படும் பால வேலை எப்போது முடியும் ?

விடை—

சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிடப்படும் பாலப்பணி மற்றும் அணுகு சாலைப்பணி முழுதும் முடிக்கப்பட்டு தற்போது வாகனப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

### தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான ஹெலிகாப்டர்.

9—வினா எண். 7754—திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசினுடைய ஹெலிகாப்டர் உதிரி பாகங்கள் இல்லாமல் முடங்கிக் கிடப்பது உண்மையா ?

(ஆ) ஹெலிகாப்டரை சீர்திருத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) இல்லை;

(ஆ) சென்ற ஆண்டு அரசு ஹெலிகாப்டருக்கு டெயில் ரோட்டார் பிளேடு, பேட்டரி பைப்பயர் புருப் மற்றும் பைர் ஃப்ருப் ஹோஸ் முதலிய உதிரிப்பாகங்கள் தேவைப்பட்டன. மேற்கூறிய உதிரிபாகங்கள் சென்ற ஆண்டே வாங்கிப் பொருத்தப் பட்டன. அவை பொருத்தப்பட்ட பின்னர் ஹெலிகாப்டர் நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

விருதுநகர் தொகுதி தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கூட்டுறவுச் சங்கம் மூலம் வீடுகள் கட்டும் பணி.

10—வினா எண். 7804—திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விருதுநகர் தொகுதியில் பிரவிப்பட்டி, நமஸ்கரித்தாள்பட்டி போன்ற ஊர்களில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடுகட்டித் தருவதாகக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்பாடு செய்து பேஸ் மட்டம் போடப்பட்டு திரும்ப அரசிடம் இருந்து பணம் கிடைக் காமல் அவதிப்படுவதால் வீடுகள் கட்டிமுடிக்க அரசு உடனடி யாக ஏற்பாடு செய்யுமா ?

விடை—

பிரவிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த 26 ஆதி திராவிட உறுப்பினர்களுக்கும், நமஸ்கரித்தாள்பட்டியைச் சேர்ந்த 14 ஆதி திராவிட உறுப்பினர்களுக்கும், 1984–85-ம் நிதி ஆண்டில் தேசிய வங்கிகளிடமிருந்து எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்காத தாலும் 1985–86-லிருந்து கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களில் ஆதி திராவிடர் அல்லாதவருக்கு மட்டுமே கடன் வழங்குவது என்று அரசு முடிவு செய்துள்ளதாலும் கிராமிய வீட்டு வசதி திட்டத்தின் கீழ் நிதியுதவி வழங்க இயலவில்லை. எனினும், இவர்கள் ஆதி திராவிடர்கள் வீட்டு வசதி திட்டம், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் விண்ணப்பித்து உதவி பெறலாம்.

கீத்தான் விடுதியிலுள்ள பாய் நெசவுத் தொழில் கூட்டுறவுச் சங்கம்.

11—வினா எண். 8147—திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி கீத்தான் விடுதியில் நடைபெற்றுவரும் பாய் நெசவுத் தொழில் கூட்டுறவுச் சங்கத்தின் மூலதனம் எவ்வளவு ?

(ஆ) பாய் நெசவில் எத்தனை பேர்கள் ஈடுபட்டுள்ளனர் ?

(இ) பாய் நெசவில் ஆண்டு வருமானம் எவ்வளவு ?

(ஈ) அதை விரிவுபடுத்தும் திட்டம் ஏதும் உள்ளதா ?

விடை—

(அ) தீத்தான் விடுதி பாய் நெசவுச் சங்கத்தின் மூலதனம் ரூ. 5,275/-

(ஆ) பாய் நெசவில் ஈடுபட்டுள்ளவர்கள் மொத்தம் 40 பேர்கள்.

(இ) பாய் நெசவில் கடந்த மூன்று ஆண்டு வருமானம்:—

| | | | |
|---|---|---|---|
| 1983-84 | .. | .. | ரூ. 2,045.00 |
| 1984-85 | .. | .. | ரூ. 1,580.00 |
| 1985-86 | .. | .. | ரூ. 7,031.00 |

(ஈ) நவீன தறி பெங்களூரிலிருந்து பெறப்பட்டு, பாய் நெசவு நடைபெறுகிறது. பாய் உற்பத்தியைப் பெருக்கவும், வேலைவாய்ப்பு அளித்திடவும், புதிதாக ஒரு தொழிற்கூடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கோவளம் அருகே முதலைப் பண்ணையிலுள்ள முதலை வகைகள்.

12—வினா எண். 8320 திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு மாவட்டம், கோவளம் அருகே உள்ள முதலைப் பண்ணையில் எத்தனை வகை முதலைகள் வளர்க்கப் படுகின்றன ?

(ஆ) அதன் ஆண்டு பராமரிப்புச் செலவு எவ்வளவு ?

விடை—

(அ) செங்கல்பட்டு மாவட்டம், கோவளம் அருகில் வடநெமிலியில் உள்ள முதலைப்பண்ணை அரசு வனத்துறையைச் சேர்ந்தது அல்ல. சென்னை முதலை வங்கி டிரஸ்ட் நடத்தும் இப்பண்ணையில் கீழ்க்கண்ட 7 வகை முதலை இனங்கள் வளர்க்கப்படுகின்றன :—

| | | |
|---|---|---|
| 1. | சதுப்பு நில முதலை | (Marsh Crocodile) |
| 2. | உப்பு நீர் முதலை | (Salt Water Crocodile) |
| 3. | காரியல் முதலை | (Gharial) |
| 4. | அமெரிக்க அலிகேட்டர் | (American Alligator) |
| 5. | செய்மன் முதலை | (Specticaled caiman) |
| 6. | சைமீஸ் முதலை | (Simese Crocodile) |
| 7. | மேற்கு ஆப்பிரிக்க முதலை | (West African Dwarf Crocodile) |

(ஆ) இம்முதலைப் பண்ணையின் சராசரி ஆண்டு பராமரிப்புச் செலவு ரூ. 2,48,500/- ஆகும்.

[1987 மே 9

### 1984—85-ல் தஞ்சை மாவட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் முடிக்கப்பட்ட திட்டங்கள்.

13—வினா எண். 8652—திரு. ப. ந. இராமச்சந்திரன்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1984—85-ல் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் கிராமப்புறங்களில் முடிக்கப்பட்ட திட்டங்கள் எத்தனை ?

(ஆ) முடிவுறாமல் உள்ள திட்டங்கள் எத்தனை ?

விடை—

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட மொத்தம் 330 குடிநீர்த் திட்டங்களில், 1984—85-ம் ஆண்டு 148 குடிநீர்த் திட்டங்களும், 1985—86 ஆம் ஆண்டு 161 குடுநீர்த் திட்டங்களும் முடிக்கப்பெற்றுவிட்டன. மீதம் உள்ள 21 குடிநீர்த் திட்டங்கள் நடப்பு ஆண்டில் (1986—87) முடிக்கப்பெற உள்ளன.

### தூங்கான்செட்டியூர் கிராமத்திலுள்ள சமுதாயக் கிணறு.

14—வினா எண். 8839—திரு. க. பாரமலை : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் தாலுாகா குஜிலியம்பாறைபாளையம் பஞ்சாயத்து யூனியன் தூங்கான்செட்டியூர் கிராமத்தில் உள்ள சமுதாயக் கிணற்றைப் பொது உபயோகத்திற்குக் கொண்டுவர அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

விடை—

மேற்கூறப்பட்ட சமுதாயக் கிணற்றை சுற்றியுள்ள சுமார் 80 சென்ட் நிலத்தை அவ்வூரைச் சேர்ந்த மூவர் ஆக்கிரமித்துள்ளனர். இந்த ஆக்கிரமிப்புகளை காலி செய்து மேற்படி கிணற்றை உபயோகத்திற்கு கொண்டுவர வேடசந்தூர் வட்டாட்சியருக்கும் குஜிலியம்பாறை ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கும் தகுந்த அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

### கிராக்குளத்திலுள்ள குளத்தை செம்மைப்படுத்தல்.

15—வினா எண். 9199—திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சாத்தான்குளம் தொகுதி கிராக்குளத்தில் 1977 ஆம் ஆண்டு பஞ்ச நிவாரண பணி மூலம் பாசனம் பெற விவசாயத்திற்கு தோண்டப்பட்ட குளம் உள்ளதை அரசு அறியுமா ?



1987 மே 9]

(ஆ) ஆம் எனில், அதை மீண்டும் செம்மைப்படுத்தி கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆம். மேற்படி கண்மாய் 1977-ம் ஆண்டு வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் ரூ. 3.40 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையில் அமைக்கப்பட்டு 1977-ம் ஆண்டு வெள்ள நிவாரணப் பணியின் கீழ் உடைப்பு அடைத்தல் கரையை பலப்படுத்தும் பணிகள் முறையே ரூ. 10,000, ரூ. 7,500-க்கு நிறைவேற்றப்பட்டன. மேலும் செம்மைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### பழம்புத்தூர் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்கும் திட்டம்.

16—வினா எண் 9389—திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் தாலுாகா, பழம்புத்தூர் கிராமத்தில் மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது எவ்வளவு தொகை ஒதுக்கீட்டில் நிறைவேற்றப்பட உள்ளது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை. பழம்புத்தூர் கிராம மக்கள் தங்களுக்குத் தேவையான குடிநீரை அருகிலுள்ள ஓடையிலிருந்து பெற்றுக்கொள்கின்றனர். இக்குடியிருப்பின் தற்போதைய மக்கட்தொகை 731 தான். எனினும், இக்குடியிருப்பு 3-ன் கீழ்வரும் பிரச்சினைக் குடியிருப்பாகத் தற்போது கண்டறியப்பட்டுள்ளதால், இதற்கான குடிநீர்த் திட்டம் வரும் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

### அரசுக் கல்லூரிகளில் பணிபுரியும் துணைப் பேராசிரியர், பேராசிரியர் எண்ணிக்கை.

17—வினா எண் 9686—திரு. வி. தங்கவேலு : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுக் கல்லூரிகளில் பணிபுரியும் மொத்த துணைப் பேராசிரியர், பேராசிரியர் எத்தனை பேர் ?

(ஆ) இதில் தாழ்த்தப்பட்ட மலைவாழ் துணைப் பேராசிரியர், பேராசிரியர் எத்தனை பேர் ?

(இ) இடஒதுக்கீடு (Reservation policy) கொள்கைப்படி 18% தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்களுக்கு வழங்கப் பட்டுள்ளதா ?

(ஈ) இதுவரை தாழ்த்தப்பட்ட மலைவாழ் மக்கள் எத்தனை சதவீதம் பணிபுரிகிறார்கள்?

விடை—

| | | |
|---|---|---|
| (அ) அரசுக் கல்லூரிகளில் பணிபுரியும் மொத்த துணைப் பேராசிரியர்கள் | .. | 3,292 |
| பேராசிரியர்கள் .. | .. | 906 |
| (ஆ) இதில் தாழ்த்தப்பட்ட மலைவாழ் துணைப் பேராசிரியர்கள் | .. | 213 |
| பேராசிரியர்கள் .. | .. | 46 |
| (இ) ஆம். | | |
| (ஈ) துணைப் பேராசிரியர்கள் | .. | 6.5% |
| பேராசிரியர்கள் .. | .. | 5% |

### அம்பாசமுத்திரம் சரகத்தில் சமூகநலக்காடுகள் வளர்ச்சித் திட்டத்திற்காக செலவிடப்பட்ட தொகை.

18—வினா எண் 9668—திரு. எஸ். பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடந்த மூன்று ஆண்டுகளில் அம்பாசமுத்திரம் ரேஞ்சில் சமூகநலக்காடுகள் வளர்ச்சித் திட்டத்திற்காக செலவு செய்த தொகை எவ்வளவு?

விடை—

திருநெல்வேலி மாவட்டத்தில், அம்பாசமுத்திரம் சரகத்தில் சமூகவனப் பணி திட்டங்களுக்காக, கடந்த மூன்று வருடங்களில் கீழ்க்கண்டவாறு செலவிடப்பட்டுள்ளது :—

| | | | |
|---|---|---|---|
| 1983–84 | .. | .. | ரூ. 3.47 இலட்சம் |
| 1984–85 | .. | .. | ரூ. 6.66 இலட்சம் |
| 1985–86 | .. | .. | ரூ. 4.34 இலட்சம் |

### மதுரை இராஜாஜி மருத்துவமனையிலுள்ள ஸ்கேனர் வசதி.

19—வினா எண் 9709—திரு. மு. மாரிமுத்து : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை இராஜாஜி மருத்துவமனையிலுள்ள ஸ்கேனர் வசதி இலவசமாகப் பெற்றிட ஏற்படுத்தப்பட்டுள்ள வருமான வரம்பென்ன ?





(ஆ) ஸ்கேனர் மூலம் இதுவரை எத்தனை பேர் பயன் பெற்றுள்ளார்கள் ?

(இ) ஸ்கேனர் இயக்கிட பயிற்சி பெற்றவர்கள் எத்தனை பேர் உள்ளனர் ?

விடை—

(அ) மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை, மதுரையில் ஸ்கேனர் வசதி இலவசமாக பெற்றிட ஏற்படுத்தப்பட்டுள்ள வருமான வரம்பு மாதம் ரூ. 300க்கும் கீழ் ரூ. 299 வரை.

(ஆ) ஸ்கேனர் மூலம் 2,295 பேர்கள் (2–8–86 தேதி வரை) பயன் பெற்றுள்ளார்கள்.

(இ) ஸ்கேனர் இயக்கிட மூன்று பேர்கள் பயிற்சி பெற்றுள்ளார்கள். அவர்கள் பின்வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| 1. | கதிரியக்கப் பேராசிரியர் (Professor of Radiology) | .. | 1 |
| 2. | கதிரியக்கப் பயிற்றுனர் (Tutor in Radiology) | .. | 1 |
| 3. | நுண்கதிர்ப் பயிற்சியாளர் (Radiographer) | .. | 1 |

### நரிமணம் எரிவாயு தொழிற்சாலை

20—வினா எண் 9785—திரு. மு. தங்கமணி : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நரிமணம் எரிவாயு தொழிற்சாலையில் தஞ்சை மாவட்ட இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை கொடுக்கப் படுமா ?

விடை—

மைய அரசு தஞ்சாவூர் மாவட்டத்தில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை மற்றும் பெட்ரோலிய தொழிற்சாலைகள் நிறுவிய பின்னர் இதுபற்றி மைய அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்படும்.

### புதுக்கோட்டையில் விளையாட்டரங்கம் கட்டுதல்.

21—வினா எண் 9788—திரு. ஜே. முகம்மது கனி: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டு ஸ்டேடியம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்திற்கருகில் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், செலவாகும் தொகை எவ்வளவு ?

விடை—

(அ) புதுக்கோட்டையில் விளையாட்டரங்கம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து 1½ கி. மீ. தூரத்தில் காட்டுப்புதுக்குளம் என்னும் இடத்தில் கட்டப்படவிருக்கிறது.

(ஆ) மேற்படி விளையாட்டரங்கம் கட்ட 1983–84-ம் ஆண்டில் ரூ. 7.25 இலட்சத்திற்கு திருத்திய மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. மீண்டும் தற்போது புதுக்கோட்டை நிர்வாகப் பொறியாளரால், நடப்பாண்டு நிலவரப்படி திருத்திய மதிப்பீடுகள் தயாரிக்கப்படுகின்றன.

சித்தமல்லி கிராம உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டுதல்.

22—வினா எண் 9935—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள சித்தமல்லி கிராமத்திலுள்ள அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இல்லை.

தா. பழூர் ஒன்றியத்தில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் பயன்பெற்றோர் எண்ணிக்கை.

23—வினா எண் 9972—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் தா. பழூர் ஒன்றியத்தில் 1985–86 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் பயன்பெற்றவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—

ஜெயங்கொண்டம் தொகுதியில் தா. பழூர் ஒன்றியத்தில் 1985–86 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் (Integrated Rural Development Programme) 640 பேர்கள் பயன்பெற்றுள்ளனர்.

விவரங்கள் பின்வருமாறு :

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | முதல் கறவைமாடு | .. | 63 | நபர்கள் |
| 2. | இரண்டாவது கறவைமாடு | .. | 205 | நபர்கள் |
| 3. | செம்மறி ஆடு | .. | 6 | நபர்கள் |
| 4. | உழவுமாடு | .. | 5 | நபர்கள் |
| 5. | வண்டியும் மாடும் | .. | 1 | நபர் |
| 6 | தொழில் சேவை உதவி (ISB) | .. | 326 | நபர்கள் |
| 7. | டிரைசம் பயிற்சி | .. | 34 | நபர்கள் |
| | மொத்தம் | — | 640 | நபர்கள் |



குமரி மாவட்டத்தில் குடிசைகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மின் இணைப்புகள்.

24—வினா எண் 10009—டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குமரி மாவட்டத்தில் குடிசைகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தின்கீழ் 1983, 1984, 1985 ஆம் ஆண்டுகளில் முறையே தாலுகா வாரியாக வழங்கப்பட்ட மின் இணைப்புகள் எவ்வளவு ?

விடை—

குடிசைகளுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 1983, 1984, 1985 ஆம் ஆண்டுகளில் குமரி மாவட்டத்தில் 483 மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன ; அதன் தாலுகா வாரியான விவரம் :

| ஆண்டு. | விளவங்கோடு தாலுகா. | கல்குளம் தாலுகா. | அகஸ்தீஸ்வரம் தாலுகா. | தோவாளை தாலுகா. |
|---|---|---|---|---|
| 1983 . | 33 | 89 | .. | 91 |
| 1984 | 5 | 23 | 9 | 90 |
| 1985 | 28 | 26 | 12 | 77 |
| | 66 | 138 | 21 | 258 |

1984–85 ஆம் ஆண்டு அரசுத்துறை நிறுவனத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட உப்பு.

25—வினா எண் 10095—திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1984–85 ஆம் ஆண்டு தமிழகத்தின் அரசுத்துறை நிறுவனத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட உப்பு எத்தனை டன்கள் ?

விடை—

1984–85 ஆம் ஆண்டு தமிழ்நாடு உப்பு நிறுவனம் கீழ்க்கண்டவாறு உப்பு உற்பத்தி செய்துள்ளது :

(அ) மாரியூர் வாலிநோக்கம் உப்புத் தொழிற்சாலை, இராமநாதபுரம் மாவட்டம் 3?,500 மெ.டன்.

(ஆ) சர்தார் வேதரத்தினம் உப்புத் தொழிற்சாலை, தஞ்சாவூர் மாவட்டம் 2,766 மெ.டன்.

### கோவில்பட்டி தொகுதியில் முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டோர் எண்ணிக்கை.

26—வினா எண் 1014.—திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதியில் 1976 ஜனவரி முதல் 1986 ஜூன் முடிய எத்தனை பேர் முதியோர் பென்சன் திட்டத்தின் கீழ் மனு செய்துள்ளனர் ?

(ஆ) எத்தனை பேருக்கு பென்சன் தரப்பட்டுள்ளது ?

விடை—

(அ) 1976 ஜனவரி முதல் 1986 ஜூன் முடிய முதியோர் உதவித்தொகைக்கு மனு செய்தவர்கள் 9,797 பேர்.

(ஆ) 1976 ஜனவரி முதல் 1986 ஜூன் முடிய முதியோர் உதவித்தொகை அளிக்கப்பட்டவர்கள் 3,707 பேர்.

### தமிழ்நாடு வாணிபக் கழகத்தில் பணிபுரியும் இளநிலை எழுத்தர், தட்டச்சர்களை நிரந்தரமாக்குதல்.

27—வினா எண் 10140—திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு ஸ்டேட் மார்க்கெட்டிங் கார்ப்பரேஷனில் (TASMAC) பணிபுரியும் இளநிலை எழுத்தர்கள் மற்றும் தட்டச்சர்களை நிரந்தரமாக்காமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஒரு நிறுவனம் ஆகும். இக்கழகத்தின் பணி விதிகள் வரையறுக்கப்பட்டு, இயக்குநர் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு, சமீபத்தில்தான் வெளியிடப்பட்டுள்ளன. எனவே, தட்டச்சர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்களின் பணிகளை அவர்களின் பணிக்காலத்தைப் பொறுத்து வரன்முறை செய்வதற்கான ஆணைகள் விரைவில் அக்கழகத்தால் வழங்கப்படும்.



### கோவையிலுள்ள பேச்சிமுத்து ரங்கசாமி கவுண்டர் திருமண மண்டபம்.

28—வினா எண் 10263—திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை வைசியாள் வீதியில் உள்ள அறநிலையத் துறைக்குச் சொந்தமான பேச்சிமுத்து ரங்கசாமி கவுண்டர் திருமண மண்டபத்தை மாற்றியமைக்கும் திட்டம் அரசுக்கு உண்டா ?

(ஆ) ஆம் எனில், இதன் மதிப்பீடு எவ்வளவு ?
(இ) பணி எப்போது தொடங்கும் ?

விடை—

(அ) திருமண மண்டபத்தை மாற்றியமைக்கும் திட்டம் ஏதுமில்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

### திருச்சியில் உலோகங்கள் பற்றிய பரிசோதனை நிலையம் அமைக்கும் திட்டம்.

29—வினா எண் 10399—திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியில் உலோகங்கள் பற்றிய பரிசோதனை நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது ?

விடை—

(அ) இல்லை.
(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் வெங்காயத்தின் மதிப்பு.

30—வினா எண் 10417—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985–86 ஆம் ஆண்டில் தமிழகத்தில் விளையும் சின்ன, பெரிய வெங்காயம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு எவ்வளவு ?

(ஆ) அதன் மொத்த மதிப்பீடு எவ்வளவு ?

விடை—

(அ) 1985–86 ஆம் ஆண்டில் சென்னை மற்றும் நாகப்பட்டினம் துறைமுகங்கள் மூலம் 39,383 மெ. டன் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. (சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம் என்ற அளவில் விவரங்கள் கிடைக்கப் பெறவில்லை).

(ஆ) அதன் மொத்த மதிப்பு ரூ. 1,011.20 இலட்சங்கள்.

## ஆலங்குடி தொகுதி தன்னிறைவுத் திட்டப் பணிகள்.

31—வினா எண் 10454—திரு. அ. வெங்கடாசலம் : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலங்குடி தொகுதியில் உள்ள கறம்பகுடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வடபகுதியில் தன்னிறைவுத் திட்ட வேலைகள் சரிவர நடைபெறவும், சிறப்பு நிதி வழங்கி பாதிக்கப்பட்ட பகுதிகளை சீர்படுத்தவும், அரசிடம் செயற் குறிப்பு உண்டா ?

விடை—

இவ்வூராட்சி ஒன்றியத்தில் 251 தன்னிறைவுத் திட்ட வேலைகள் ஏற்கனவே நாற்பது இலட்ச ரூபாய் ஒதுக்கீட்டில் பரவலாக எல்லா கிராமங்களிலும் நிறைவேற்றப் பட்டுள்ளன. மேற்கொண்டு சிறப்பு நிதி வழங்கிட செயற் குறிப்பு யாதும் இல்லை.

## அணைகளில் முதலைகள் வளர்த்தல்.

32—வினா எண் 10521—திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அணைகளில் முதலைகள் வளர்க்கப்படு கின்றனவா ?

(ஆ) ஆம் எனில், அதனால் என்ன பயன் ?

விடை—

(அ) தமிழக அணைகளில் முதலைகள் வளர்க்கப்படுவ தில்லை. முதலைகள் அழியும் நிலையில் இருந்ததால், வனத் துறை முதலைகளைப் பண்ணைகளில் உற்பத்தி செய்து அவற்றில் சிலவற்றை சில அணைகளிலும், சிற்றாறுகளிலும் விட்டுள்ளது. அமராவதி அணையில் இயற்கையாகவே முதலைகள் உள்ளன.

(ஆ) முதலை இனம் அழிந்துபோகாமல் பாதுகாக்கப் படுவதற்காகவே முதலைகள் வளர்க்கப்படுகின்றன.

## மின்சார வாரியத்திடம் மின்சாரம் பெற்று விநியோகம் செய்யும் நகரசபைகள் மற்றும் மாநகராட்சிகள்.

33—வினா எண் 10570—மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநிலங்களில் எந்தெந்த நகரசபைகள், மாநகராட்சிகள் மின்சார வாரியத்திடம் மின்சாரம் பெற்று விநியோகம் செய்கின்றன ?



98797



விடை—

தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட மாநகராட்சி மன்றங்கள், நகராட்சிக்குரிய மின்சார நிறுவனங்கள், மின்சார வாரியத்திலிருந்து மின்சாரம் பெற்று அவைகளின் நுகர்வோர்களுக்கு விநியோகம் செய்கின்றன:—

1. மதுரை மாநகராட்சி.
2. கோயமுத்தூர் மாநகராட்சி.
3. பொள்ளாச்சி நகராட்சிக்குரிய மின்சார நிறுவனம்.
4. தஞ்சை நகராட்சிக்குரிய மின்சார நிறுவனம்.
5. கரூர் நகராட்சிக்குரிய மின்சார நிறுவனம்.

## புதுக்கோட்டை நகரில் விளையாட்டரங்கம் அமைத்தல்.

34—வினா எண் 10639—திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை நகரில் ஒரு விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை—

புதுக்கோட்டை நகரில் காட்டுப்புதுக்குளம் பகுதியில் விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு ஆயத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவ்விளையாட்டு அரங்கம் கட்ட மாநில அரசு ரூ. 2 இலட்சமும், மைய அரசு ரூ. 50,000—மும் மான்யமாக அளித்துள்ளன. தற்போதைய நிலவரப்படியான மதிப்பீடுகள் மற்றும் வரைபடங்கள் பொதுப்பணித்துறை நிர்வாகப் பொறியாளர் (கட்டிடக் கோட்டம்), திருச்சி, அவர் களால் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

## குளத்தூர் தொகுதியிலுள்ள சத்துணவு மையங்களுக்கு கட்டிடம் கட்டுதல்.

35—வினா எண் 10649—திரு. த. மாரிமுத்து : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதியில் எத்தனை சத்துணவு மையங் களுக்கு கட்டிடம் கட்டித் தரப்பட்டுள்ளது ?

(ஆ) இன்னும் எத்தனை மையங்களுக்கு கட்டிடம் கட்டப் பட வேண்டும் ?

(இ) அவற்றிற்கு எப்பொழுது கட்டிடம் கட்டித் தரப்படும் ?

விடை—

(அ) குளத்தூர் தொகுதியில் 61 சத்துணவு மையங்களுக்கு இதுவரை கட்டிடம் கட்டித் தரப்பட்டுள்ளது.

Y211,31 'N87
N87.43.4

(ஆ) இன்னும் 189 சத்துணவு மையங்களுக்கு கட்டிடம் கட்டப்பட வேண்டும்.

(இ) அரசின் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப ஒவ்வொரு ஆண்டும் கட்டிட வேலைகள் மேற்கொள்ளப்பட்டு படிப்படியாக செய்து முடிக்கப்படும்.

**கோவை, கோட்டை ஈஸ்வரன் கோவிலில் திருமண மண்டபம் கட்டுதல்**

36—வினா எண் 10767—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை, கோட்டை ஈஸ்வரன் கோவிலில் திருமண மண்டபம் கட்டும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திருவல்லிக்கேணி— போரூருக்கு புதிய பேருந்து வழித்தடம் ஏற்படுத்தும் திட்டம்.**

37—வினா எண் 10914—திரு. கே. உச்சி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, திருவல்லிக்கேணியிலிருந்து போரூர் பகுதிக்கு புதிய பேருந்து வழித்தடம் ஏற்படுத்தும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை. தடம் எண் 25—சி விவேகானந்தர் இல்லத்திலிருந்து போரூருக்கு திருவல்லிக்கேணி வழியாக 12 பேருந்துகள் இயங்கி வருகின்றன. புறநகர் தடங்களாகிய 54—வி, 54—சி, 54—ஜி, 54—கே, 54—ஜே, 88, 88—சி, 88—வி மற்றும் 17—சி, 17—வி தடங்களில் அண்ணா சாலையிலிருந்து போரூருக்குச் செல்லலாம். பெருநகர் இயக்கத்தில் ஒவ்வொரு இடத்தையும் மற்ற [illegible]



**அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுநர்களுக்கு கையுறைகள் வழங்கல்.**

38—வினா எண் 10953—திரு. கே. உச்சி: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றும் ஓட்டுநர்களுக்கு கையுறைகள் வழங்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) நீலகிரி மாவட்டத்தில் போக்குவரத்து தொழிலாளர்களுக்கு கையுறைகள், பனியன்கள், கம்பளிகள் வழங்க அரசு முன்வருமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) நீலகிரி மாவட்டத்தில் பணிபுரியும் நடத்துநர், ஓட்டுநர்களுக்கு கம்பளி ஸ்வெட்டரும், மப்ளரும் சேரன் போக்குவரத்துக் கழகத்தால் வழங்கப்படுகிறது.

**மயிலாப்பூர் பகுதியில் பொதுக் கழிப்பிடங்கள் கட்டும் திட்டம்.**

39—வினா எண் 11105—திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, மயிலாப்பூர் பகுதியில் எத்தனை பொதுக் கழிப்பிடங்கள் புதிதாகக் கட்டுவதற்கு திட்டம் உள்ளது?

(ஆ) எவ்வளவு பொதுக் கழிப்பிடங்களை மேம்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது?

விடை—

(அ) சென்னை, மயிலாப்பூர் பகுதியில் புதிதாக இரண்டு பொதுக் கழிப்பிடங்களை, கேசவ பெருமாள்புரம் (கோட்டம் 134) மற்றும் காரணீஸ்வரன் பகோடா தெரு (கோட்டம் 130) ஆகிய இடங்களில் கட்ட சென்னை மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) கீழ்க்கண்ட 7 பொதுக் கழிப்பிடங்களை மேம்படுத்துவதற்கு சென்னை மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

1. ஸ்லாட்டர்புரம் (கோட்டம் 129)
2. மல்லிமாநகர் (கோட்டம் 131)
3. கபாலித்தோட்டம் பொதுக்கழிப்பிடம்—1 (கோட்டம் 133)
4. கபாலித்தோட்டம் பொதுக்கழிப்பிடம்—2 (கோட்டம் 133)
5. திருவள்ளுவர்பேட்டை (கோட்டம் 133)
6. ராஜா தோட்டம் (கோட்டம் 134)

## தமிழ்நாட்டில் பெய்த மழையின் அளவு.

40—வினா எண் 11200—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 1983–84, 1984–85, 1985–86 ஆம் ஆண்டுகளில் பெய்த மழையின் அளவு எவ்வளவு ?

விடை—

| ஆண்டு | மழையளவு (மில்லி மீட்டர்). |
|---|---|
| 1983–84 | 1222.5 |
| 1984–85 | 701.4 |
| 1985–86 | 951.1 |

## அரியலூரிலிருந்து அணைக்கரைக்கு பேருந்து விடல்.

41—வினா எண் 11292—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில், அரியலூரிலிருந்து விளாங்குடி, சுத்தமல்லி, தா.பழூர், அனக்குடம், கோடலிகருப்பூர் வழியாக அணைக்கரை வரை பேருந்து விட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

விடை—

அரியலூர் முதல் அணைக்கரை வரை செந்துறை வழியாகவும், உடையார்பாளையம் வழியாகவும் புறநகர் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மேலே குறிப்பிட்டுள்ள வழித்தடம் முழுவதும் தற்போது தனியார் மற்றும் கழகப் பேருந்துகளால் பேருந்து வசதி பெற்று வருகிறது. எனவே, வினாவில் குறிப்பிட்டுள்ள வழித்தடத்தில் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

42—வினா எண் 11293—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் தொகுதியில் அரியலூரிலிருந்து விளாங்குடி கைகாட்டி, மூட்டுவாஞ்சேரி, திருபுரந்தான், தா.பழூர், கோடலிகருப்பூர் வழியாக அணைக்கரை வரை பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?



விடை—

ஏற்கனவே அரியலூரிலிருந்து மூட்டுவாஞ்சேரி வரை இரு நகரப்பேருந்துகளும், அரியலூரிலிருந்து திருபுரந்தான் வரை புறநகர் பேருந்து ஒன்றும் தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்பட்டு வருகிறது. திருபுரந்தான் முதல் தா. பழூர் வரையிலான சாலை பழுதடைந்துள்ளதால், இப்பகுதியில் பேருந்து இயக்கப்படவில்லை. எனவே, விரைவில் குறிப்பிட்டுள்ள வழித்தடத்தில் பேருந்து இயக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

## சென்னை—ஆண்டிமடம் இடையே புதிய திருவள்ளுவர் வழித்தடம் துவங்கும் திட்டம்.

43—வினா எண் 11357—டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னைக்கும் ஆண்டிமடத்திற்கும் இடையே புதிய திருவள்ளுவர் வழித்தடம் துவங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

சென்னை-கும்பகோணம்(வழி) ஆண்டிமடம் வழித்தடத்தில் தினசரி இரண்டு பேருந்துகள் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தால் நான்கு ஓட்டங்களாக இயங்குகின்றது. மேலும் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகம் சென்னை—ஜெயங்கொண்டான் (வழி) ஆண்டிமடம் தடத்தில் தினசரி நான்கு பேருந்துகம் இயக்குகின்றது. மேற்கூறிய சூழ்நிலையில் கூடுதலாக புதிய வழித்தடம் துவங்கும் திட்டம் அரசிடம் ஏதுமில்லை.

## நீலகிரி மாவட்டத்தில் தொழிலாளர் குழந்தைகளுக்கு சிகிச்சையளிக்க தனி மருத்துவ நிலையம் கட்டுதல்.

44—வினா எண் 11444—திரு. கே. உச்சி : மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு சிகிச்சைக்காக தனி மருத்துவ நிலையம் கட்ட, தொழிலாளர் நல வாரியத்தை அரசு வலியுறுத்துமா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறுவப்படும் ?

விடை—

(அ) நீலகிரி மாவட்டத்தில் பெரும்பான்மையான தொழிலாளர்கள் தோட்ட நிறுவனங்களில் பணிபுரிகின்றனர். 1957-ம் ஆண்டு தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர் சட்டப் பிரிவு 10–ன் படியும் மற்றும் 1955–ம் ஆண்டு தமிழ்நாடு தோட்டத் தொழிலாளர் விதிகள் 20 முதல் 26–ன் படியும் தோட்ட நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் நிர்வாகத்தினர் தகுந்த மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கவேண்டும் என கூறப்பட்டுள்ளது. அவ்வாறு

சட்ட ரீதியாக நிர்வாகத்தினர் செய்யவேண்டிய வசதிகளுக்குத் தொழிலாளர் நல நிதியிலிருந்து செலவு செய்யக்கூடாது என்று தமிழ்நாடு தொழிலாளர் நலச் சட்டப் பிரிவு 17(2)–ன் கீழ் காப்புரை (1)–ல் கூறப்பட்டுள்ளது. ஆகவே, நீலகிரி மாவட்டத்தில் தொழிலாளர்களின் குழந்தைகளின் சிகிச்சைக்காக தனிமருத்துவ நிலையம் இந்நிதியிலிருந்து கட்டத் தேவையில்லை.

(ஆ) எழாது.

### கூடலூரில் ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் ஏற்படுத்தல்.

45—வினா எண் 11508—திரு. கே. உச்சி : மாண்புமிகு சத்துணவு, சமூகநலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூரில் ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கூடலூரில் அரசினர் அனாதை இல்லம் ஏற்படுத்த 1984–ல் ஆணை வழங்கப்பட்டது. கூடலூரில் தகுந்த கட்டிடம் கிடைக்காததினால் அவ்வில்லம் உதகையில் ஆரம்பிக்கப்பட்டது. உதகையிலுள்ள அவ்வில்லத்திற்கான கட்டிடம் போதிய வசதியுள்ளதாகவும் பாதுகாப்பானதாகவும் இல்லாததினால் அவ்வில்லம் 1–3–1986 முதல் பெந்தத்தி கிராமத்திற்கு மாற்றப்பட்டு இயங்கி வருகிறது.

### சிறைகளிலிருந்து அரசு காப்பு விடுப்பில் அனுப்பப்பட்டோர் எண்ணிக்கை.

46—வினா எண் 11641—திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1984–85, 1985–86 ஆம் ஆண்டுகளில் தமிழக சிறைகளில் இருந்து பரோலில் சென்றவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) அதில் தலைமறைவாக உள்ளவர்கள் எத்தனை பேர் ?

விடை—

(அ) 1984–85 ஆம் ஆண்டில் 3,142 சிறைக் கைதிகளும், 1985–86 ஆம் ஆண்டில் 1,793 சிறைக் கைதிகளும் அவசர விடுப்பில் அனுப்பப்பட்டனர். 1984–85 ஆம் ஆண்டில் 559 சிறைக் கைதிகளும், 1985–86-ல் 386 சிறைக் கைதிகளும் அரசு காப்பு விடுப்பில் அனுப்பப்பட்டனர்.

(ஆ) அதில் 1984–85 ஆம் ஆண்டில் 32 சிறைக் கைதிகளும், 1985–86 ஆம் ஆண்டில் 21 சிறைக் கைதிகளும் தலைமறைவாக உள்ளனர்.



### அனகாபுத்தூரிலிருந்து சைதாப்பேட்டை வரை கூடுதல் பேருந்து விடல்.

47—வினா எண் 11672—திரு. கே. உச்சி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அனகாபுத்தூரிலிருந்து சைதாப்பேட்டை வரை செல்லும் தடம் எண் 60-ல் கூடுதலாக பேருந்து விட அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேறும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை. தடம் எண் 60–ல் ஆறு பேருந்துகளுடன் 60 பயணத்தடவைகளும் இயக்கப்படுகின்றன. 1–10–1986 முதல் 60–வி குறைவான நிறுத்தங்களுடன் நான்கு பேருந்துகள் அனகாபுத்தூரிலிருந்து சைதாப்பேட்டை வழியாக சென்னைக்கு இயக்கப்படுகின்றன. தடம் எண் 60–ஏ.குன்றத்தூர் முருகன் கோவிலிலிருந்து சென்னைக்கு அனகாபுத்தூர் வழியாக 2 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே, தடம் எண் 60–ல் கூடுதலாக பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதும் அரசிடமில்லை

### அழகர்மலை வேம்பரளி அருகிலுள்ள தங்கும் விடுதியை செப்பனிடல்.

48—வினா எண் 11802—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, அழகர்மலையில் வேம்பரளி அருகில் வனத்துறைக்குச் சொந்தமான தங்கும் விடுதியை செப்பனிடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

இந்த ஓய்வு விடுதியை சிறப்புப் பழுதுபார்க்க ரூ. 4,000–க்கு வனத்துறைத் தலைவரால் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு வேலை நடைபெற்றுவருகிறது.

### கும்பகோணத்தில் சோழன் போக்குவரத்துக் கழக கட்டுமானப் பிரிவு ஆரம்பிக்கும் திட்டம்.

49—வினா எண் 12026—திரு. மு. இராசாங்கம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சோழன் போக்குவரத்துக் கழக கட்டுமானப் பிரிவு (Engineering Section) கும்பகோணத்தில் ஆரம்பிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

[1987 மே 9

தஞ்சை மாவட்டத்திலுள்ள கோழிப் பண்ணைகள்.

50—வினா எண் 12050—திரு. மு. இராமலிங்கம் : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் எத்தனை இடங்களில் அரசு கோழிப்பண்ணைகள் உள்ளன ?

(ஆ) ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு கோழிப்பண்ணை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரத்தநாடு, பட்டுக் கோட்டை ஆகிய இரு இடங்களில் அரசு கோழிப்பண்ணைகள் உள்ளன.

(ஆ) ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒரு கோழிப்பண்ணை அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. இரங்கல் தீர்மானம்.

உறுப்பினர் திரு. வி. பி. சிந்தன் மறைவு குறித்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. செங்கற்பட்டு மாவட்டம், வில்லிவாக்கம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இப்பேரவையின் உறுப்பினரான திரு. வி. பி. சிந்தன் அவர்கள் 8-5-1987 அன்று இரவு 12 மணியளவில் சோவியத் யூனியனில் வோல்கா கிரேட் நகரில் மாரடைப்பால் மறைந்த துயரச் செய்தியை இப்பேரவைக்கு மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் இரங்கல் தீர்மானத்தை முன் மொழிவார்கள்,

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

"1985-ஆம் ஆண்டு முதல் இந்திய கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் சார்பில் செங்கற்பட்டு மாவட்டம் வில்லிவாக்கம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரான திரு. வி. பி. சிந்தன் அவர்கள் 8—5—87-ஆம் நாள் அன்று சோவியத் யூனியனில் உள்ள வோல்கா கிரேட் நகரில் மாரடைப்பால் இயற்கை எய்தியதைக் குறித்து இந்த அவை வருந்துகிறது. அவர் மறைவால் ஒரு நல்ல அரசியல்வாதியையும், தொழிற் சங்கத் தலைவரையும், இனிய பண்பாளரையும், அன்பு, அடக்கம்,



1987 மே 9] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

எளிமை, ஆகிய நல்ல பண்புகளையும் ஒருங்கே பெற்றவருமான ஒரு சிறந்த சட்டமன்ற உறுப்பினரையும் இந்த அவை இழந்து விட்டு இருக்கிறது. அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், பரிவினையும், இரங்கலையும் இப்பேரவை தெரிவித்துக் கொள்கின்றது".

தோழர் வி. பி. சிந்தன் அவர்களுடைய மறைவு நமக்கெல் லாம் அதிர்ச்சி தரத்தக்க வகையில், எதிர்பாராத வகையில் இன்று காலை எட்டியது. சோவியத் யூனியனுக்கு மே நாள் விழாவில் கலந்து கொள்வதற்கு சென்ற அவர்களுக்கு ஒப்படைக் கப்பட்ட ஒரு திடீர் மறைவு ஏற்படும் என்று நாம் யாரும் எதிர்பார்க்க வில்லை. அங்கு மாரடைப்பின் காரணமாக அவர்கள் இயற்கை எய்த வேண்டிய ஒரு கட்டத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள். அவர்களுடைய மறைவு எல்லோருக்கும் துக்கத்தையும், துயரத் தையும் விளைவிக்கக் கூடிய ஒன்றாகும் என்பதை நாம் நன்கு அறிவோம். அவர்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கட்சியினுடைய தமிழ் மாநிலக் குழுவினுடைய உறுப்பினராகவும் சி.ஐ.டி.யு.வினுடைய தமிழ் மாநில உதவித் தலைவராகவும், வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதியினுடைய உறுப்பினராகவும் இருந்து பணியாற்றி வந்தவர்கள். அவர்கள் 1918 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10 ஆம் நாள் கண்ணனூரில் பிறந்து, பிறகு பள்ளிப் பருவ காலத்திலேயே அரசியலில் ஈடுபாடு கொண்டவர்கள். 10ஆம் வகுப்பு வரையிலும் (எஸ்.எஸ்.எல்.சி) படித்து, தன்னுடைய படிக்கின்ற காலத்திலேயே சுதந்திரப் போராட்டத்திலேயெல்லாம் ஈடுபாடு கொண்டு, கிளர்ச்சிகளிலே ஈடுபாடு கொண்டு, விடுதலைப் போராட்ட உணர்வும், உரிமை வேட்கை உணர்வும் கொண்டவர்கள் என்பதை அவருடைய வாழ்க்கை வரலாறு தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. 1939 ஆம் ஆண்டில் அவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியில் முழுக்க முழுக்க தம்மை ஈடுபடுத்திக்கொண்டு, அதனுடைய கொள்கை களுக்காகவும், கோட்பாடுகளுக்காகவும், அந்தக் கட்சியினுடைய திட்டங்களை நிறைவேற்றுவதிலே தன்னுடைய முழு நேரத்தை யும், உழைப்பையும் பயன்படுத்திக் கொண்டு வந்தார்கள். 1941 ஆம் ஆண்டிலிருந்து அவர் தமிழகத்திற்கு வந்து, தமிழகத் தினுடைய கம்யூனிஸ்ட் கட்சியின் வளர்ச்சியிலே தம்மை முழுக்க ஈடுபடுத்திக்கொண்டு, குறிப்பாக தொழிற்சங்கத் துறைகளிலே தம்மை ஈடுபடுத்திக்கொண்ட அவர்கள், அதிலே அரும்பாடுபட்டு வந்தார்கள் என்பதைப் பல உறுப்பினர்களும் மிக நன்றாக அறிவார்கள். அவர்கள் வெள்ளையர் ஆண்ட காலத்திலேயே சுதந்திரப் போராட்ட இயக்கங்களிலேயும் போராட்டங்களிலேயும் கலந்து கொண்டு, ஆறு ஆண்டுகாலம் ஆறு முறை சிறைக்கு சென்றிருக்கிறார்கள். சுதந்திரப் போராட்டத்திற்குப் பிறகு பல்வேறு தொழிற்சங்கப் போராட்டங்களில், மற்றவைகளில் ஈடுபட்டு ஆறு ஆண்டுகாலம் சிறைக்குச் சென்றிருக்கிறார்கள்.

1951–வது ஆண்டில் பாண்டிச்சேரியில் பிரெஞ்ச் ஆதிக்கத்திலிருந்து அந்தப் பகுதி விடுபட்டு, தமிழர்களுடைய உரிமைகள் பெற்ற ஒரு மாநிலப் பகுதியாக விளங்கவேண்டும் என்று நடந்த போராட்டங்களிலே எல்லாம் அவர்கள் முன்னணியிலிருந்து பாடுபட்டு வந்தார்கள் என்பதையும் நாடு நன்கு உணரும். இப்படி அரசியல், பொருளாதாரப் போராட்டங்கள் பலவற்றிலேயும் அவர்கள் மிக்க ஈடுபாடு கொண்டிருந்தார்கள் என்பது மட்டுமில்லாமல், தொழிற்சங்க வளர்ச்சிகளிலேயும், பல தொழிற்சாலைகளிலே தொழிற்சங்கங்களை உருவாக்கி, அதற்குத் தலைமை தாங்கி அவற்றையெல்லாம் மிகச் சிறப்புற நடத்துவதில் கண்ணுங்கருத்துமாக இருந்து, ஆர்வமும் அக்கறையும் கொண்டு, அரும்பாடு பட்டு வந்தார்கள் என்பதையும் இந்த அவையும், நாடும் நன்கு உணரும்.

அது மட்டுமல்லாமல், அவர்கள் சிறந்த இயல்புகளுக்கும், சிறந்த பண்புகளுக்கும் உறைவிடமாக விளங்கியவர் ஆவார்கள். அவர்கள் எல்லோராலும் விரும்பத் தகுந்த அளவிற்கு, எல்லோரிடமும் இனிமையாகப் பழகக்கூடிய தன்மை வாய்ந்தவர்கள் ஆவார்கள். அதே நேரத்தில் கொள்கையிலே நல்ல பிடிப்பும், உறுதிப்பாடும் கொண்டவர்கள். எந்த ஒரு கட்டத்திலேயும், கொள்கையையோ அல்லது தன்னுடைய கோட்பாட்டையோ, திட்டத்தையோ விட்டுக் கொடுக்காமல், இனிமையாகப் பேசி அதை முடிக்கவேண்டும் என்பதிலே கண்ணுங்கருத்துமாக இருப்பவர்கள். பல சமயங்களிலே அவர்களோடு உரையாடுகின்றபோதுகூட, பல கருத்துக்களை எடுத்துவைக்கின்ற போதுகூட நியாயத்திற்குட்பட்டு வருகின்ற பாங்கினை அவரிடத்திலே நான் கண்டிருக்கிறேன். அவரோடு ஒரு 35 ஆண்டுக் காலமாக பழகுகின்ற வாய்ப்பினை நான் பெற்று இருக்கும்போதெல்லாம் அவருடைய இனிய பண்புகளை நான் நன்கு அறிந்திருக்கிறேன்.

அந்த இனிய பண்புகளுக்கு மதிப்பு அளிக்கின்ற பாங்கினையும், அவர்களிடத்திலே கண்டிருக்கிறேன். அந்த அளவிற்கு அரசியல் கருத்து வேறுபாடுகளுக்கு மதிப்பளித்து, அதே சமயத்தில் தாம் கொண்டிருக்கிற கருத்துக்களுக்கு ஊக்கமும், உறுதிப்பாடும் கொண்டு, அவற்றை நிலைநாட்டுவதிலேயும் சிறந்த எடுத்துக்காட்டாக இருந்தவர்கள். யாரிடத்திலேயும் இன்முகத்தோடு சிரித்துப் பேசியே பழகி, அதன் மூலமாக தன்னுடைய கருத்துக்களை வலியுறுத்துகின்ற பாங்கினையும், அவர்கள் எடுத்து வைக்கத் தவறியது இல்லை. எப்போதும் அடக்கமாகவும். அமைதியாகவும், இருப்பவர்கள். அதே நேரத்தில் எல்லாவிதமான பணிகளிலேயும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டும் வாழ்ந்தவர்கள். சென்னையைச் சுற்றியுள்ள பல்வேறு தொழிற்சங்கங்களிலேயும், பல பணிமனைகளிலேயும் இருக்கின்ற தொழிலாளர்கள் சங்கங்களோடு ஈடுபாடு கொண்டு, அவற்றிற்கு எல்லாம் தலைமை தாங்கி, அவற்றை மிகத் திறம்பட நடத்திக் கொண்டு வந்தார்கள் என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம்,





இப்படி பொது வாழ்க்கைக்கே சிறந்த ஒரு எடுத்துக்காட்டாக விளங்கியவர் என்பது மட்டுமல்லாமல், தம்மையும் பொது வாழ்க்கைக்கு ஈடுபடுத்தி, தன்னுடைய நேரத்தையும், நினைப்பையும், தம்முடைய உழைப்பையும், அறிவுத் திறமையும், ஆற்றல் திறனையும் பொது வாழக்கைக்குப் பயன்படுத்தவேண்டும் என்பதிலே கண்ணுங்கருத்துமாக இருந்து மிக்க ஊக்கத்தோடு, உணர்ச்சியோடு, நாட்டிற்காகவும், சமுதாயத்திற்காகவும், பொருளாதார மேம்பாட்டிற்காகவும் மிகக் குறிப்பாக பாட்டாளி வர்கத்திற்காகவும், தொழில்ாளர்களுடைய நன்மைகளுக்காகவும் பாடுபட்டு வந்தவர் ஆவார்கள். அந்த வகையிலே அவர்கள் மிக மிகப் போற்றத் தகுந்த ஒருவராக இருந்து பாடுபட்டு வந்தார்கள். அவர்கள் எதிர்பாராத வகையில் இயற்கை எய்தியது நமக்கு எல்லாம் ஆழ்ந்த வருத்தத்தையும், ஆழ்ந்த துக்கத்தையும், துயரத்தையும் அளிப்பனவாகும். அவர்கள் மறைவு குறித்து, ஆளுங்கட்சியின் சார்பாகவும், குறிப்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களின் சார்பாகவும், இந்த அவையின் சார்பாகவும், அவரை இழந்து வருந்துகின்ற அவருடைய குடும்பத்தினருக்கும், அவர்களைச் சார்ந்த நண்பர்களுக்கும், அவர்களைச் சார்ந்த உற்ற தோழர்களுக்கும் அனுதாபத்தை இந்த அவை தெரிவிக்கிறது, என்கிற முறையில் இந்தத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்,

*திரு. ஜி. கே. ஜெ. பாரதி; மாண்புமிகு பேரவையினுடைய தலைநாயகர் அவர்களே, நம்முடைய பேரவையினுடைய முன்னவர் அவர்கள் முன்மொழிந்திருக்கிற இந்தத் தீர்மானத்தின் மீது நம்முடைய மறைந்த அமரராகக் காட்சியளிக்கின்ற வி. பி. சிந்தன் அவர்களுடைய உணர்வினை, அவர்கள் நிலையாக நின்று கொள்கைப் பிடிப்பிலே நின்று, இளமைக் காலங்களிலே தன்னுடைய அரும்பாக மலர்கின்றபோது, நல்ல காங்கிரஸ் கட்சியினுடைய அரும்பான தொண்டராக நல்ல விடுதலைப் போராட்ட வீரராக, நல்ல சிறைப்பறவையாக, விடுதலைப் போராட்டத்திலே ஈடுபட்டு 6 ஆண்டுகள் தன்னுடைய

(முற்பகல் 10-10)

சிறை வாழ்க்கையிலே செம்மையாக வாழ்ந்து, விடுதலை பெற்ற பிறகு கூட, 6 ஆண்டுகள் சிறையிலே தன்னுடைய வாழ்வை அர்ப்பணித்துக் கொண்ட ஒரு மாபெரும் மனிதரை, மனம் உள்ளவன் மனிதன் என்று சொல்லுகிற ஒரு சிறப்புடைய மனிதரின் உணர்வை நம்முடைய பேரவையிலே அவை முன்னவர் அவர்கள் இரங்கலாகத் தெரிவித்தார்கள். நான் சொல்லுவேன் பட்டினத்துப் பெருந்தகை நம் ஒற்றியூரில் தான் வாழ்ந்தார்கள். அந்த ஒற்றியூரில்தான் திரு. சிந்தன் அவர்களும் ஏராளமான தொழிற்கூடங்களில் சங்கத் தலைவராக இருந்திருக்கிறார்கள். இப்போதும் இருந்து கொண்டிருக்கிறார்கள். அசோக் லேலண்டு, விம்கோ. இந்தியன் ஆர்கானிக் கெமிக்கல்ஸ் போன்றவற்றிலெல்லாம் இருந்தார்கள். நமது தமிழக முதல்வர்

பொன்மனச் செம்மல் அவர்களோடு உடைசியாக கலந்து கொண்ட விழாவான எம். ஆர். எப். நிறுவன விழாவில், புன்னகை மன்னன் வி. பி. சிந்தன் புன்முறுவல் பூத்தபடியே, புதிய சிந்தனைகளையும் கம்யூனிச சித்தாந்தங்களையும் அள்ளி அள்ளி வீசிய அந்த மாபெரும் மனிதரின் ஆன்மா எங்கோ சென்று விட்டது என்று சொன்னாலும்கூட, பட்டினத்துப் பெருந் தகை ஒற்றியூரில் வாழ்ந்தபோது '

"காடோ செடியோ கடற்புறமோ
கனமே மிகுந்த
நாடோ நகரோ நகர் நடுவோ
நலமே மிகுந்த
வீடோ, புறந் திண்ணையோ தமியேன்
உடல் வீழுமிடம்
நீடோய் கழுக் குன்றில் ஈசா
உயிர்த் துணை நின்பதமே"

என்று பேசுவார், அதாவது கழுக்குன்றில் வாழுகின்ற பெருமானே, அடியேனின் உடலில் இருக்கின்ற ஆன்மா இந்தக் காட்டில் விழுமோ, இல்லை வீட்டில் விழுமோ, கடற்கரையில் விழுமோ, அன்றி செல்வம் மிகுந்த நாட்டில் விழுமோ, எங்கோ விழுமோ அறியென்—ஆனால் அது உனக்கு மட்டும்தான் தெரியும். எனக்கு முன்னாலே சொன்னால் அந்த இடத்தைப் பிடித்துக் கொள்வேன் என்ற ஆதங்கத்தோடு பேசுகிற நிலையைப் பார்க்கிறோம். அது மட்டுமல்ல,

"செத்துக் கிடக்கும் பிணத்தருகே, இனிச் சாம்பிணங்கள்
கத்தும் கணக்கென்ன காண் காளத்தி ஈசனே" என்றும்

பேசுகிற உணர்வைப் பார்க்கிறோம், இங்கே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். மிக அழகான, அற்புதமான குறளைச் சொன்னார்கள். உலகத் தின் பெருமை என்ன என்று வள்ளுவரைப் பார்த்து கேட்கிற போது'

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு"

என்றார். நேற்று இருந்தவன் இன்றைக்கு இல்லை என்கிற வகையில் நேற்று இருந்த தன்னுடைய வாழ்நாளைச் செம்மை யாக வாழ்ந்தவர் இன்று நம்மிடையே இல்லை என்பதைப் பார்க்கிறோம்.

அப்பர் பெருமான் செங்கற்பட்டு மாவட்டத்திலேதான் வாழ்ந்தார். இவரும் அதிகமாக செங்கற்பட்டு மாவட்டத் தில்தான் அரசியல் செய்தார். 7 ஆம் நூற்றாண்டிலே





வாழ்ந்த அப்பர் பெருமான் அவர்கள் அருமையாகப் பாடிய தேவாரத்தின் ஒரு பாடலை எல்லா அரசியல்வாதிகளும்கூட சொல்லுவார்கள்

" நங்கடம்பனைப் பெற்றவள் பாங்கினன்
தென்கடம்பைத் திருக் கரக் கோயிலான
தன் கடன் னடியேனையும் தாங்குதல்,
என் கடன் பணி செய்து கிடப்பதே"

என்று. " Do the duty without fear ". கடன் செய்வதை, பணி செய்துகிடப்பதே என்று சொன்னார்கள்.

அப்படி பணிசெய்து 68 வயதில்தான் சட்டப் பேரவைக் குள்ளே நுழைய முடிகிறது என்று சொன்னால், அவர் அதுவரை பணி செய்தே கிடந்தார். "சும்மா கிட" என்பார்கள். ஆனால் அவரோ பணி செய்தே கிடந்து, பணியால் உயர்ந்த ஒரு மாபெரும் மனிதர். அந்த மனிதரின் எண்ண உணர்வு களை எண்ணிப் பார்க்கிறேன்.

உள்ளபடியே ஒரு தேசியவாதியாக இருந்த அவரோடு நானும் பல்வேறு பொறுப்புக்களில், தொழிற்சங்கங்களில் இருந் திருக்கிறேன். அவர் தலைவராகவும், நான் துணைத் தலை வராகவும் பல தொழிற்சங்கங்களில் பணியாற்றியிருக்கிறோம். அப்படிப்பட்ட மனிதர் இன்றைக்கு மறைந்திருக்கிறார். தமிழகத்திலே ஒன்றைச் சொல்லுவார்கள், ஒருவர் மறைந்து விட்டால் அவர் இறைவன் அடி சேர்ந்தார் என்பதைக் குறிக்க "அவர் வைகுந்த பதவி அடைந்தார்" என்று வைணவர்கள் சொல்லுவார்கள். அதைப் போலவே "சிவலோக பதவியடைந் தார்" என்று சைவர்கள் சொல்லுவார்கள். "பரலோக பதவி அடைந்தார்" என்று கர்த்தரை நம்புகிறவர்கள் சொல்லுவார்கள். அதைப்போல் நான் சொல்ல வேண்டுமென்றால் அவர் உண்மை யாக நம்பிய சித்தாந்தத்தின் அடிப்படையில் அவர்கள் ருஷ்யாவில் ஒல்காகிராடில் மறைகிறபோதுகூட அந்தச் சிந்தனையோடுதான் இருந்தார் என்பதாலே, அவர் "மார்க் சிஸ்ட் திருவடி பதவியை அடைந்தார்" என்று சொல்லும் போது என் உள்ளம் குமுறுகிறது. ஒரு உண்மையான லட்சிய வாதியாக வாழ்ந்தவர் அவர். 7 ஆம் நூற்றாண்டில் அப்பர் பெருமான் அவர்கள் சொன்ன மாதிரி " மலையே வந்து வீழினும் மனிதர்களால் நிலையில் நின்று கலங்கப் பெறுதீரேல்" என்று மலையே வந்து வீழ்ந்தாலும், தன்னுடைய கொள்கை யிலிருந்து, தன்னுடைய எண்ணங்களிலிருந்து, தன்னுடைய லட்சியங்களிலிருந்து ஒரு துளியும் அகலாத ஒரு லட்சியமனிதர். அவர் ருஷ்யாவுக்குச் சென்று, அங்கே அவர் உயிர் பிரிகிற போதுகூட, அந்த மார்க்சிஸ்ட் தத்துவத்திலிருந்து ஒரு துளியும் அகலாமல் அதையே 'நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து, அகமும் புறமும் அன்பே நிறைந்து ஊற்றெடுக்கும் கண்ணீராக' உள்ளடக்கிய அந்த மாபெரும் மனிதரின் மறைவுக்காக காங்கிரஸ் பேரியக்கம் உள்ளபடியே கண்ணீர் சிந்துகிறது.

காரணம் அவர் காங்கிரஸ் கட்சிக்கு உற்சாகம் ஊட்டக் கூடிய மனிதராக இருந்ததற்காக அல்ல-அகில இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய தலைமைப் பொறுப்பை காந்தியடிகள் ஏற்று—ஏ.ஐ.டி.யு.சி. உருவாக்கப்பட்டபோது, தமிழகத்தில் ஒரு இளைஞனாக நின்று, அந்தத் தொழிற்சங்கம் இங்கே வளர வேண்டும், வாழவேண்டும் என்று முதன் முதலில் குரல் கொடுத்தாரே அதற்காக, தொழிலாளி வர்க்கத்திற்காக அன்று நின்று குரல் கொடுத்து போராடினாரே அதற்காக, எனவேதான் மறைந்த திரு. வி.பி. சிந்தன் அவர்களின் உணர்வை நாங்கள் பேணுகிறோம். அதற்குப் பிறகு அவர்கள் காங்கிரஸ் கட்சியிலிருந்து கொள்கையாலே மாறுபட்டாலும், காந்தியத் தத்துவத்திலிருந்து விலகாமல், அந்தத் தத்துவப்படியே வாழவேண்டும் என்று கருதி, கடைசிவரை எளிமையாகவே கதர் ஆடையையே அணிந்து, வெண்மையான உள்ளத்தோடே வாழ்ந்து வந்தார். அந்தக் கொள்ளைக்கார வெள்ளைக்காரன் ஆடையைத் தூக்கி எரிந்த ஒரு நல்ல மனிதர். அவருடைய ஆன்மா மார்க்சிஸ்ட் திருவடியைச் சேர்ந்திருக்கிறது. அதன் காரணமாக அவருடைய எண்ணங்கள், நினைவுகள் எல்லாம் செம்மைப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே அந்த அற்புத ஆன்மா இறைவன் திருவடியில் கலந்து, செம்மையாக வாழவேண்டும் என்று நான் சார்ந்திருக்கிற காங்கிரஸ் கட்சியின் சார்பில்—காங்கிரஸ் கட்சியினுடைய தலைவரின் சார்பாக—வேண்டுகிறேன். மேலும் குறிப்பாக கம்யூனிஸ்ட் கட்சியினருக்கும், அவருடைய குடும்பத்திற்கும், அவருடைய சுற்றத்தாருக்கும் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக நம்முடைய தமிழகத் தலைமை அமைச்சர் பொன்மனத்தாரின் விழாவைக் கடைசியாகக் காணப் பெற்று, கண்டு களித்து, ருஷ்யா சென்று மறைந்த அவருடைய மாபெரும் ஆன்மா இறைவனுடைய திருவடியில் செம்மையாகக் கலக்க வேண்டுமென்று வேண்டுகிறேன்.

காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, பேரவை உறுப்பினர்கள் சார்பாக ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து நிறைவு செய்கிறேன். நன்றி வணக்கம்.

**திரு. கி. மனோகரன் :** மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரிய பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்பாராத விதமாக நமது உள்ளம் எல்லாம் புண் அடையத்தக்க வகையில் இதயம் இரத்தக் கண்ணீர் வடிக்கின்ற நிலையில் நம்மைவிட்டு பிரிந்து சென்றிருக்கிறார். நம்மோடு சட்டப்பேரவையில் அன்போடு உரையாற்றி, கருத்துக்களை அடக்கத்தோடு எடுத்து வைத்து, யார் உள்ளத்தையும் புண்படுத்த வேண்டும் என்ற நோக்கம் துளிகூட இல்லாமல் தனது 65-வது வயதிலேயும் ஓர் இளைஞனைப் போல சுறுசுறுப்பாக பணியாற்றியவர், வி.பி.சி. என்று எல்லோராலும் செல்லமாக அழைக்கப்படுகிற வி. பி. சிந்தன் அவர்கள் ஆவார்கள். இங்கே நமது அவை முன்னவர் அவரது வரலாற்றைப் பற்றி அவர் ஆற்றிய சேவைகளைப் பற்றி, அவர் உருவாக்கிய தியாகங்களைப் பற்றி, அந்த





தியாகங்களுக்கு அவர் வகுத்த இலக்கணத்தைப் பற்றி, அந்த இலக்கணத்திற்கேற்ற இலக்கணமாக வாழ்ந்ததைப்பற்றி எல்லாம் தெளிவாக எடுத்துச்சொன்னார்.

கண்ணனூரில் பிறந்து, பள்ளி பருவத்திலேயே சிறை செல்லுகிற அளவிற்குத் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, அதற்குப் பின்னால் சென்னைக்கு அவரை அனுப்பி வைத்தார்கள். காங்கிரஸ் கட்சியிலே தீவிரமாகப் பணியாற்றி, அவை முன்னவர் சொன்னதைப் போல ஆறாண்டுக் காலம் விடுதலைக்கு முன்னாலும், இந்திய துணைக் கண்டம் விடுதலை பெற்ற பிறகு ஆறாண்டுக் காலம் சிறைக் கூடத்திலேயும் தனது வாழ்வைக் கழித்தவர் என்பதை நாடு அறியும். அதேபோல ஃபிரன்ச் ஆதிக்கத்திலேயிருந்து பாண்டிச்சேரி விடுபட வேண்டும் என்பதற்காக போராட்டக்களத்திலே குதித்து, தியாகத் தொண்டு புரிந்தவர் மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய வி. பி. சிந்தன் ஆவார்கள்.

1939 ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சியில் அவர் சேர்ந்தார். 1949 ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் இயக்கப் பணிகளுக்காக ஆட்சித் தலைமையால் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். அதே போல தெலுங்கானா போராட்டம் நடைபெற்ற நேரத்தில் அந்த போராட்டத்தில் நிலச்சுவாந்தாரர்களுக்கு எதிராக, ஏழை, பாழைகளுக்காக, விவசாயிகளுக்காக அந்தப் போராட்டத்திலே கலந்து கொண்டவர் நமது மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய வி.பி. சிந்தன் அவர்கள். அவரைப்பற்றி அவை முன்னவர் சொல்லும்போது, எவ்வளவு பெரிய அடக்கத்திற்குச் சொந்தக்காரராக இருந்தார் என்பது பற்றி சொன்னார். அதே நேரத்தில் எவ்வளவு கொள்கை பிடிப்பில் அழுத்தமாக இருந்தார் என்பதையும் சுட்டிக்காட்டினார். கொள்கையைப் பொறுத்த வரையில் fundamental philosophy என்று கூறுகிற Marxist philosophy-ஐப் பொறுத்தவரையில் compromise என்ற வார்த்தைக்கு இடமில்லை என்ற அளவிற்கு உறுதியாக நின்றவர் வி. பி. சிந்தன் அவர்கள்.

திரு. வி. பி. சிந்தன் அவர்கள் எத்தனை தொழிற்சங்கங்களிலே தலைவராக பணியாற்றியவர் என்பதும், எத்தனை தொழிற்சங்கங்களில் உதவித் தலைவராக பணியாற்றியவர் என்பதும் அத்தனை தொழிலாளர்களையும் அணைத்துச் செல்வதில் எந்த அளவிற்கு அவர் ஒரு தாயாக பணியாற்றியவர் என்பதும் அவரைத் தெரிந்தவர்கள் நன்றாக புரிந்து வைத்திருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். திரு. வி. பி. சிந்தன் அவர்கள் மே தின விழாவிற்கு ருஷ்யாவிலிருந்து அழைப்பைப் பெற்றுச் சென்றார்.

[திரு. கி. மனோகரன்] [1987 மே 9

(முற்பகல் 10-20)

மே தின விழாவைப் பார்த்ததற்குப் பிறகு, பார்க்க வேண்டிய விழாவைக் கண் குளிர இறுதியாகப் பார்த்ததற்குப் பிறகு, எந்த லட்சியத்திற்காக சோவியத் நாடு தன்னை உயர்த்திக் கொண்டதோ, அதே சோவியத் நாட்டில், ஒரு வகையில் திரு. வி.பி. சிந்தன் அவர்களுடைய தாய் நாட்டில் அவர் இறுதியாகக் கண்ணை மூடினார் என்ற கலங்க வைக்கும் செய்தி நம் அனைவரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. போன வாரம்தான் கேட்டேன், அருமை நண்பர் திரு. ரமணி அவர்களிடம், சிந்தன் அவர்களைக் காணோமே, எங்கே சென்றிருக்கிறார் என்று கேட்டபோது, மாஸ்கோ சென்றிருக்கிறார், மே தின விழாவில் பங்கு பெறுவதற்காகப் போயிருக்கிறார் என்று குறிப்பிட்டார். மே தின விழா முடிந்ததற்குப் பிறகு, கொஞ்ச நாள் சுற்றியதற்குப் பிறகு, அவருடைய உடம்பையும் தேற்றியதற்குப் பிறகு தாயகம் திரும்பி வந்து சேருவார்கள் என்று எதிர் பார்த்துக்கொண்டிருந்த நிலையில், நம்முடைய அவைத் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னதுபோல், ''நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு'' என்ற பொருளுக்கேற்ப நேற்றைக்கு இருந்தார், இன்றைக்குக் காணோம் என்று கவலைப்படத்தக்க அளவுக்கு வி.பி. சிந்தன் அவர்கள் நம்மைவிட்டு விடைபெற்றுச் சென்றிருக்கிறார். அவர் கடுமையான உழைப்பாளி என்பதும், கட்சிக்கு அப்பாற்பட்டு அனைவரோடும் இணைந்து, பிணைந்து செயல்படுவார் என்பதும் மிக நன்றாக எல்லோருக்கும் தெரியும். இன்னும் சொல்லப் போனால் அவரது 'சொக்காயைக் கழற்றினால் விழுப்புண்களை நீங்கள் பார்க்க முடியும். அந்த அளவுக்கு வெள்ளை ஏகாதிபத்தியத்தின் கொடுமைகளை அவர் சகித்தவர். அவர் எழுதிய இரண்டு புத்தகங்களைப் படித்துப் பார்க்கும் வாய்ப்பைப்பெற்றேன். ஒன்று ரஷ்ய புரட்சியின் வரலாறு, இன்னொன்று தெலுங்கானா போராட்டம். இந்த இரண்டு புத்தகங்களை, அவர் நினைவின் அறிகுறியாக விட்டுச் சென்றிருக்கிறார். அதைப் படித்துப் பார்த்து, அவருக்கு இருக்கும் புலமையை எண்ணி, எண்ணி மகிழ்ச்சிக் கடலில் மிதந்தது உண்டு. இங்கே அவையில் உள்ள அனைவருக்கும் தெரியும், வி.பி. சிந்தன் என்றால் காட்சிக்கு எளியவன், கடும் சொல்லுக்கு அப்பாற்பட்டவன். அப்படிப்பட்ட சிந்தனின் மறைவு தொழிற் சங்கத்திற்கும் உழைக்கின்ற சமுதாயத்திற்கும், வர்க்கத்திற்கும், நாகரீக அரசியல் பேசுகின்ற நல்லவர்களுக்கும், கட்சிக்கு அப்பாற்பட்டு இணைய முடியும் என்ற லட்சியம் படைத்தவர்களுக்கும், குறுகிய ஒரு வளையத்திற்குள் கட்சிகள் அமையுமானால், அந்த வளையத்திற்கு அப்பாலுள்ள பெரிய நிலப்பரப்பில் மனித இதயங்கள் ஒன்றாகும் வாய்ப்பு உண்டு என்று கருதுகின்றவர்கள் மத்தியில் நிச்சயமாக ஒரு பெரிய இழப்பை ஏற்படுத்துமென்று நம்புகிறேன். அவருக்கு ஓர் ஆண் குழந்தை இருக்கிறதென்று செய்தி கிடைத்தது. ஒரே ஒரு குழந்தைக்குத் தந்தை. அந்தக் குடும்பம் இன்றைக்கு அலறித்



1987 மே 9] [திரு. கி. மனோகரன்]

துடித்துக்கொண்டிருக்கும் என்பது தெரியும். அந்தக் குடும்பம் அவரை இழந்து வாடுகிறது. அந்தக் குடும்பத்திற்கு நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், அந்த இயக்கத்தை வழி நடத்திச் செல்லும் தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் சார்பில் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்து, அமைகிறேன்.

திரு. கு. ரமணி : மதிப்புமிக்க தலைவரவர்களே, எங்களுடைய கட்சியினுடைய முக்கியமான ஊழியர்களிலே ஒருவரான தோழர் வி.பி.சி. அவர்கள் மறைந்தது ஒரு ஈடு செய்ய முடியாத இழப்பு. எங்கள் கட்சியிலே நாங்கள் சாதாரணமாகச் சொல்லக்கூடிய விஷயம், ஒரு கட்சியினுடைய ஊழியர், ஒரு கேடர் என்பது, It is more than a gold reserve. தங்கம் இருப்பைத் தங்கள் கையிலே வைத்துக்கொண்டால் அது எவ்வளவு பெரிது என்று கருதுகிறார்களோ, அதைவிட உயர்ந்தது ஒரு சீசன்ட் கேடர். அப்படி ஒரு ஊழியரை உருவாக்குவது என்பது பல பத்தாண்டுகள் முயற்சி எடுத்தாலும்கூட சிரமம்தான். அப்படிப்பட்ட நல்ல ஊழியர் பற்றி நமது முன்னவர் அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தின்போது அவர் பேசும்போது சொன்ன வார்த்தைகளும் காங்கிரஸ் கட்சியினுடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரதி அவர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர்களில் ஒருவரான தோழர் திரு. மனோகரன் அவர்களும் குறிப்பிட்டது மிக முக்கியமான அம்சங்கள். ஆனால் அவற்றிற்கெல்லாம் இலக்கணமாகத் திகழக் கூடிய தன்மையைக் கொண்டவர் தோழர் வி. பி. சி. அவர்கள். அவர்கள் பள்ளிப் பருவத்திலேயே அன்றைக்கு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்து நாடு முழுவதும் சீறிக் கிளம்பி நடந்துகொண்டிருக்கக்கூடிய இயக்கத்தில் கலந்துகொண்டார்கள் அந்த இயக்கத்திலே ஈடுபட்டிருப்பவர்கள் யாரும் உயிரோடு பாக்கியாவார்கள் என்று யாரும் அன்றைக்கு அநேகமாக நம்புவதில்லை. அந்த காலத்திலே எங்களை எல்லாம் சிறைக்குள்ளே தள்ளியபோது, எங்களை எல்லாம் இந்தியாவிற்கு அப்பாலுள்ள சிக்கிம் நாட்டிலே தள்ளப்போகிறார்கள். எங்கள் எல்லோரையும் வெளியிலே போகவிடமாட்டார்கள் என்று எங்களுக்குச் சொல்லப்பட்டது. அன்றைக்கு அங்கே எங்களோடு இருந்தவர்களில் ஒருவர் வி.பி.சி. அவர்கள். அப்படிப்பட்ட போராட்டங்களிலே அவர்கள் ஈடுபட்டார்கள். மாணவ பருவத்திலே ஈடுபட்டு காங்கிரஸ் கட்சியிலே உறுப்பினராக இருந்து பாடுபட்டவர். அதற்குப் பிறகு கம்யூனிஸ்ட் தத்துவத்தின்பால் ஈர்க்கப்பட்டு அந்த விஞ்ஞானத்தை அவர்கள் படித்து சமுதாய முன்னேற்றத்திற்கான ஒரு சரியான வழி, பாதை என்பதை ஏற்றுக்கொண்டு 'ஃபிடலிட்டி டு பிரின்சிபிள்ஸ்' என்று சொல்கிறோமே—கோட்பாடு தத்துவங்களுக்கு உண்மையாக உறுதியாக பதறாமல் விட்டுக் கொடுக்காமல் நிற்பது என்பது—அந்த பாதையிலே அவர் வளர்ந்தவர்.

[திரு. கு. ரமணி] [1987 மே 9

அப்படிப்பட்ட அவர், 1941-ம் வருடத்தில் தமிழகத்திலே கம்யூனிஸ்ட் இயக்கத்தை வளர்க்கவேண்டுமென்பதற்காகவே கட்சியினுடைய தலைமையால் உத்தரவிடப்பட்டு இங்கே வந்து கம்யூனிஸ்ட் இயக்கத்திற்காக பாடுபட்டவர். அதிலிருந்து அவர் தமிழகத்தினுடைய முன்னேற்றத்திற்காகவும், இந்திய நாட்டினுடைய வளர்ச்சிக்காகவும், விடுதலைக்காகவும் தன்னையும் தமிழ்நாட்டிலே இருக்கின்ற குடிமகனாக ஆக்கிக்கொண்டு, இங்கேயே வாழ்ந்து அவர் தன்னுடைய வாழ்வினை முடித்துக் கொண்டிருக்கின்றார். இங்கே கம்யூனிஸ்ட் இயக்கத்திலே அவர் வளர்ந்தவர். தொழிற்சங்க இயக்கத்திலே அவர் முக்கியமான பொறுப்பிலே இருப்பவர். அகில இந்திய சி.ஐ.டி.யு. ஸ்தாபனத்தினுடைய நிர்வாகத்தினுடைய உறுப்பினர். எங்களுடைய கட்சியினுடைய மாநில குழுவினுடைய முக்கியமான தலைவர்களிலே ஒருவர் அப்படிப்பட்ட பணிகளை தொடர்ந்து செய்பவர். நாட்டினுடைய விடுதலைப் போரில் அவர் எந்த அளவுக்கு ஊக்கமும் உற்சாகமும் காட்டினார்களோ அதைவிட பன்மடங்கு ஊக்கமும் உற்சாகமும் கொண்டிருந்தார்கள். அந்த மார்க்சீய கம்யூனிசச் சித்தாந்தத்திலே பிடிப்போடு எடுக்கப்பட்டவராக திகழ்ந்தார் என்பதை அவருடைய வேலைப்பாடுகளில் இருந்து நாம் பார்க்கமுடியும். அவர்களுக்கு இருக்கின்ற குணம் எங்களுக்கு எல்லாம் இருக்கிறதைவிட இன்னும் ஒரு சிறந்த குணம் அவருக்கு இருப்பது எந்த மனிதனிடத்திலேயும் ஒரு தரம் கலந்து பேசினால் அவர் நிச்சயமாக நண்பராக ஆகிவிடுவார்கள். அவர் எப்படிப்பட்டவராக இருந்தாலும் சரி. அப்படிப்பட்ட பழகும் முறை, அணுகுமுறை அந்த இரண்டையும் இந்த இயக்கத்திலே இருந்தே, வளர்ச்சியிலே இருந்தே அவர் சம்பாதித்துக்கொண்ட குணம் அது. அப்படிப்பட்ட தன்மையோடு வாழ்ந்து வந்தார். சி.ஐ.டி.யு. ஸ்தாபனத்தினுடைய தமிழ் மாநிலக் குழுவினுடைய உதவித் தலைவராக இருந்து செயல்பட்டுக்கொண்டு இருந்தார். பல தொழிற்சங்கங்களுக்கு அவர் தலைவர். அதை நான் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. அது அனைவருக்கும் தெரிந்த விஷயம். வி.பி.சி. என்றால் அந்தப் பெயரை நினையாத தொழிலாளர்களே அநேகமாக யாரும் இருக்கமாட்டார்கள். எங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர் மட்டுமல்ல, எந்த இயக்கத்திலே இருப்பவர்களும் அவருடைய பெயரை சொல்லிக்கொண்டிருப்பதும், ஏதோ காரணத்திற்காக அவர் பெயரை பயன்படுத்துவதும் சாதாரண வழக்கமாக இருந்தது. அப்படிப்பட்ட தன்மை, மிக எளிய நடையிலே அவர்களுடைய வாழ்க்கை இருந்தது என்று நான் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. அவர் காங்கிரஸ் இயக்கத்திலிருந்து கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு வந்து அவர் எந்தப் பதவியிலே புக நினைத்தவரும் அல்ல. தேர்தல் காலத்திலேகூட தான் தேர்தலிலே நிற்கவேண்டுமென்றோ அல்லது சட்டமன்றத் தேர்தலிலே, பாராளுமன்றத் தேர்தலிலே நின்று உறுப்பினராக ஆகவேண்டுமென்றோ அவருக்கு சிந்தனை இல்லை. அதைச் சொன்னாலும்கூட அநேகமாக அவர் ஒப்புக்கொள்வதில்லை.



1987 மே 9] [திரு. கு. ரமணி]

(முற்பகல் 10-30)

என்னுடைய நேரத்தை உழைப்பாளிகள் மத்தியிலே, பொது மக்களுக்கு மத்தியிலேதான் செலவழிக்க வேண்டும், அந்த நேரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்வார். அதுதான் சரியானது என்று அவர்கள் உறுதியாக நம்பிக்கொண்டிருக்கின்றவர்கள். கடைசியாக, வேலை செய்து பயன் பெறுகின்ற தொழிலாளி வர்க்கத்தினுடைய மத்தியிலே அவர் தேர்தலுக்கு நின்று வெற்றிபெற்று அந்த வர்க்கத்திற்காகப் போராடவேண்டும் என்று சொன்னோம். சட்டமன்றங்களிலே, பாராளுமன்றத்திலே நடத்தும்படியான போராட்டமும் ஒரு போராட்டம்தான் என்று சொன்னோம். கொள்கைகளுக்காகவும், மனித வாழ்க்கையில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்காகவும் சரியான முறையில் போராடி முறையிடக்கூடிய இடம்தான் சட்டமன்றம் என்று நாங்களெல்லாம் சொல்லிய பிறகு தேர்தலுக்கு நிற்க சம்மதித்து, அதிலே வெற்றியும் பெற்றார். தமிழகத்திலே இருக்கிற தொகுதிகளிலே பெரிய தொகுதி வில்லிவாக்கம் தொகுதி. வாக்குகள் எண்ணப்பட்ட பிறகு அவர் ஜெயித்தது தெரிந்தது. அப்படிப்பட்ட பெரிய தொகுதியில் நின்று வெற்றி பெற்றார். இங்கே அவர் சட்டமன்றத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் செயல்பட்டதை விட பல மடங்கு அதிகமாகச் செயல்பட்டிருக்கிறார்கள். பல அதிகாரிகளையும், அமைச்சர்களையும் மக்களுக்காக வேண்டி அனுதினமும் அவர்கள் சந்தித்து வந்தார்கள். எத்தனை விண்ணப்பங்களை, எத்தனை கடிதங்களை அவர் சமர்ப்பித்திருக்கிறார் என்பதைப் பார்த்தது எல்லோருக்கும் ஆச்சரியம் வரும். நம்மால் அம்மாதிரி செய்ய முடியாது. மக்களுக்காக வேண்டி நாள் முழுவதும் அவர் சம்பந்தப்பட்டவர்களுடன் பேசி நன்மைகளை செய்து வந்தார்.

அநேகமாக வெளிநாட்டுக்குப் போவதற்கு அவர் விரும்புவதில்லை. கடைசியாக சோவியத் நாட்டிலிருந்து இந்த மே தின விழா அழைப்பு வந்தபோது, மத்திய தொழிற்சங்க காரியாலயத்துக்கு அழைப்புகள் வரும், அவருடன் பேசி அவரை இணங்கச் செய்து அங்கு அனுப்பி வைத்தோம். சோவியத் யூனியனின் அனைத்து மத்திய தொழிலாளர் கவுன்சிலின் சார்பாக அவரை அங்கு அனுப்புவதற்காக தீர்மானித்து அழைப்பு வந்தது.

அவர் அங்கே சென்று நல்லமுறையில்தான் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்தார். மாஸ்கோ ரேடியோவில் அவர் பேசியதைக் கூட நான் கேட்டேன், அங்கிருந்து 'நான் ரொம்ப சந்தோஷமாக இருக்கிறேன். என் வாழ்க்கையில் ஒரு நல்ல நாட்டையும், அதில் வாழ்கிற மக்களையும் பார்த்தேன்' என்கிற செய்தியை தன்னுடைய மகனுக்கு எழுதிய கடிதத்தில் அவர் எழுதினார். அவர் ஏற்கெனவே ஹார்ட் அட்டாக் வந்து நோயாளியாகப் படுத்திருந்தார். அதற்கு முன்னால் உங்களுக்கெல்லாம் தெரியும். அவர் சமூக விரோதிகளின் தாக்குதலுக்கு

உள்ளாகி, கடுமையாக பாதிக்கப்பட்டார். மரணத்தின் வாயில் இருந்த அவரை பாதுகாக்க வேண்டி மாண்புமிகு முதலமைச்சர் உட்பட அத்தனை பேரும் அவர் படுத்துக்கொண்டிருந்த படுக்கைக்குப் பக்கத்தில் சென்று தகுந்த நடவடிக்கை எடுத்து, உடனுக்குடன் அவருக்கு உரிய சிகிச்சை கொடுக்கச் செய்தார்கள். மரணத்தின் வாயிலிருந்து அப்போது அவர் தப்பினார். மறுபடியும் ஹார்ட் அட்டாக் வந்தபோது நாங்கள் எல்லாம் கவலைப்பட்டோம். அதிலும் அவர் நல்ல சிகிச்சை பெற்று தப்பித்தார். அந்த நிலையிலும் அவர் ஓய்வு ஒழிச்சலின்றி செயல்பட்டு வந்தார். வேறு எந்தத் தகராறும் அவருடைய உடல் நிலையைப் பொறுத்தவரையில் எங்களுக்குப் புலப்படவில்லை, சோவியத் நாட்டுக்குச் சென்ற அவர் 8 ஆம் தேதி மாலை 7 மணிக்கு வால்காகிரேட் நகரில் அங்குள்ள தொழிற் சங்கங்களின் சார்பாக அவருக்கு அளிக்கப்பட இருந்த விருந்து உபசாரத்தில் கலந்துகொள்வதற்காக உடுத்தியிருந்த உடையை மாற்றி வேறு உடையை உடுத்திக் கொண்டிருக்கும்போது அப்படியே உணர்வின்றி கீழே விழுந்தார் என்றும் உணர்வு திரும்பாமலேயே உயிர் போயிற்று என்றும் எங்களுக்குக் கிடைத்த தகவல் சொல்கிறது. 11 ஆம் தேதி அநேகமாக அவரது சடலத்தை அனுப்பி வைப்பார்கள். அதற்குப் பிறகு இங்கே காரியங்கள் நடைபெறும். இப்படிப்பட்ட ஒரு சிறந்த ஊழியரை உருவாக்குவது எவ்வளவு சிரமம்? இன்றைக்கும் அநேக ஊழியர்களை உருவாக்கிக் கொண்டுதான் இருக்கிறோம். ஆனாலும் இப்படிப்பட்ட தரமுள்ள, சிறப்புடைய ஊழியருடைய இடத்தை நிரப்ப முடியாத அளவுக்கு ஒரு பள்ளம் விழுந்துள்ளது. கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றாக இருந்த காலத்திலே அதிலே பாடுபட்டார். 1964 ஆம் ஆண்டிலிருந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியாக அது வளர்ந்த நிலையிலும் இன்று வரைக்கும் அவர் அதிலே பாடுபட்டார். தேச விடுதலை இயக்கத்திலும் இருந்து பாடுபட்டார். பாண்டிச்சேரி விடுதலை இயக்கத்திலும் பாடுபட்டார். அது மட்டுமல்லாமல், தெலுங்கானா இயக்கத்திலும் அவர் ஈடுபட்டு உழைத்தவர். 6 வருட காலம் அவர் காராகிரகத்தில், சிறையில் இருந்திருக்கிறார். விடுதலைப் பெற்ற இந்தியாவிலும் அவர் 6 வருடம் மறுபடியும் கைதாகி சிறையில் இருந்தார். அதுமட்டுமல்ல, கடுமையான அடக்கு முறையிலிருந்து தப்பிக்க அவர் தலைமறைவாக வாழ்ந்தார். அப்படிப்பட்ட நிலையில் வாழ்ந்து வந்திருந்த ஒரு ஊழியருடைய இழப்பால் எங்கள் கட்சிக்கு இன்றைக்கு ஏற்பட்டிருக்கக் கூடிய நஷ்டம் சின்ன நஷ்டம் அல்ல. மிகப் பெரிய நஷ்டம். அவருடைய குடும்பத்தில் இரண்டே இரண்டு பேர்தான் இருக்கிறார்கள். அவருடைய மனைவி—ஒரு ஆசிரியை. அவருடைய மகன்—ஒரேயொரு மகன். இரண்டுபேர்களும் கொண்ட ஒரு குடும்பம். ஆனால், அவருடைய சுற்றம் என்று பார்க்கும்போது ஏராளமான சொந்த பந்துக்களெல்லாம் இருக்கக் கூடியவர்கள். ஆனால் இந்தத் தமிழகத்திலேதான் முற்றிலும் அவருடைய வாழ்க்கை. ஆகவே, இங்கே அவருடைய

குடும்பம் என்பது இதுதான். இந்த நிலைமையில் அந்தக் குடும்பமும், இன்றைக்கு மிகப் பெரிய ஆற்றொணாத துயரத்திற்கு ஆளாகியிருக்கின்றது. எங்களுடைய கட்சிக்கும் இது பேரிழப்பு.

அப்படிப்பட்ட நிலையில் அவரை இழந்ததற்காக நமது அவை முன்னவரவர்கள் மொழிந்துள்ள தீர்மானத்தோடு, மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பில் எங்களுடைய இரங்கலையும், அஞ்சலியையும் தெரிவித்து அதோடு ஒன்றிப்போய் என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

***திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்** : பேரவைத் தலைவர் அவர்களே, வில்லிவாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், மாநில சி,ஐ.டி.யூ.வினுடைய மாநிலத் துணைத் தலைவராக இருந்தவரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர்களிலே ஒருவருமான வி.பி.சிந்தன் அவர்களுடைய மறைவு அதிர்ச்சி தரத்தக்க செய்தியாக மாஸ்கோவிலேயிருந்து வந்திருக்கிறது.

மாஸ்கோ—சோவியத் நாட்டில் வால்கா கிரேட் நகரிலே அவர் மறைந்ததாகச் செய்தி. இரஷ்ய நாட்டினுடைய அழைப்பின் பேரில் மே தின விழாவில் கலந்து கொள்வதற்காகச் சென்ற அவர், அந்த நாட்டிலேயே மறைவுற்றதைப் பார்க்கின்ற பொழுது, தொழிலாளர்களுக்காக வாழ்ந்த அவர், அந்தத் தொழிலாளர்களுக்கான விழாவில் கலந்து கொள்ளச் சென்று, அங்கேயே அவர் மறைகின்ற நிலை ஆண்டவனால் ஏற்படுத்தப்பட்டிருப்பதைப் பார்க்கின்றபொழுது அவர் அவர்களுக்காக வாழ்ந்தவர் என்பதை அவர் உறுதிப்படுத்திக் காட்டியிருக்கின்றார்.

தொழிலாளர்களுடைய நண்பனாக இருந்து, அவர்களுக்கு ஏற்படுகின்ற பல்வேறு இக்கட்டான நிலையிலே, பல்வேறு போராட்டங்களிலே நேரடியாக ஈடுபட்டு, ஊர்வலங்களை நடத்தி, போராட்டங்களை நடத்தி, பல்வேறு நேரங்களிலே அடிபட்டு, காயப்பட்டு, சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றார்கள். இப்பொழுது பேசியவர்களெல்லாம் சொன்னார்கள், சுதந்திரமடைந்த பிறகும் ஆறாண்டுகள் சிறைச்சாலையில் இருந்திருக்கிறார்கள் என்று.

அப்படிப்பட்ட நல்ல நண்பரை நாம் இழந்து இருக்கிறோம். அவர் பல்வேறு சந்தர்ப்பங்களிலே எதிர்வரிசையிலிருந்து பேசக்கூடியவர்களுக்காக வாதாடியதை இந்த மன்றம் அறியும். அவர் இங்கே கடைசியாகப் பேசியது, நீதி நிர்வாகம்—சிறைச்சாலைகள் மானியங்களிலே என்று நினைக்கிறேன். அந்த மானியத்திலே அவர் பேசியது இன்றும் நமது காதுகளிலே ஒலித்துக் கொண்டிருக்கிறது. துணிச்சலாக, சமுதாயத்தில் நடக்கின்ற தவறுகளை அன்று அவர் சுட்டிக்காட்டிப் பேசியது மறக்க முடியாத ஒன்று.

அதேபோல் அவர் பல்வேறு தொழிலாளர் போராட்டங்களை நடத்தியிருக்கிறார்கள். அவருடைய மறைவு இந்தப் பேரவைக்கும், நாட்டு மக்களுக்கும் பேரிழப்பாகும். அவருடைய மறைவால் துயருற்றிருக்கின்ற அவருடைய குடும்பத்தினருக்கும், அவருடைய கட்சியினருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தை ஜனதாக் கட்சியின் சார்பில் தெரிவிப்பதோடு, அவை முன்னவரவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தில் ஜனதாக் கட்சி தன்னை இணைத்துக் கொள்கிறது என்று கூறி நிறைவு செய்கிறேன்.

**திரு. பொ. உத்திராபதி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த தொழிலாளி வர்க்கத்தின் ஒப்பற்ற தலைவன் வி. பி. சிந்தன் அவர்கள் இன்றைக்கு சோவியத் யூனியனுக்குச் சென்று, உலகத் தொழிலாளி வர்க்கத்தினுடைய தினமான மே தின விழாவில் சிறப்பாகக் கலந்துகொண்டு, பூரிப்படைந்து, தாயகம் திரும்பி, மீண்டும் தொழிலாளி வர்க்கத்திற்குத் தன்னை அர்ப்பணிக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்த நிலையில் இயற்கை எய்தினார். மறைந்த வி. பி. சி. அவர்கள் சட்டமன்றத்திலும், தொகுதி மக்களுக்கும் இன்னும் ஆற்றவேண்டிய பணிகள் நிறைய இருக்கும் நிலையில் இன்றைக்கு அவர் எதிர்பாராமல் நம்மைவிட்டுப் பிரிந்திருக்கிறார்கள்.

இன்றைக்கு நாட்டில் ஒவ்வொரு நாளும் மனிதர்கள் செத்துக் கொண்டிருக்கிறார்கள். பிறந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் வி. பி. சி. போன்றவர்கள் 21 வயதில் கம்யூனிஸ்ட் கட்சி இயக்கத்தில் சேர்ந்திருக்கிறார்கள் என்று சொன்னால், அதற்கு முன்னதாகவே இளம் வயதில், படித்த பள்ளி மாணவனாக இருக்கின்றபொழுது ஒரு தேசியக் கண்ணோட்டத்தோடு இந்த நாடு விடுதலை பெறுவதற்காக, வெள்ளை ஏகாதிபத்தியத்தை இந்த நாட்டை விட்டு அகற்றுவதற்குத் தன்னை முழுமையாக அர்ப்பணித்திருக்கிறார்கள். 1939-ல் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்து அதன் பின்னர் 48 ஆண்டுக்காலம் இந்தியாவிலே ஒரு பொருளாதார மாற்றத்தைக்கொண்டுவரவேண்டும்என்பதற்காகத் தன்னை முழுமையாக தொழிலாளி வர்க்கத்தோடு இணைத்து, தொழிலாளி வர்க்கத்திற்காகவே பாடுபட்டு வந்தவர் தோழர் வி. பி. சி. அவர்கள். தேச விடுதலைப் போராட்டத்திலும், விடுதலைக்குப் பிறகும் தொழிலாளி வர்க்கத்திற்காகவே தன்னை அர்ப்பணித்துக்கொண்டு தலைவனுக்குத் தலைவனாகவும், தொண்டனுக்குத் தொண்டனாகவும் இருந்து பாடுபட்டு, சிறை, சித்திரவதை, தலைமறைவு என்ற முறையில் எத்தனையோ இன்னல்களை எல்லாம் அனுபவித்து கொஞ்சம்கூட மனம் தளராமல் ஒரு லட்சியத்தோடு பாடுபட்டு வந்தவர் தோழர் வி.பி.சி. அவர்கள்.





(முற்பகல் 10-40)

ஒரு நேரத்தில் சென்னையில் தொழிலாளர்களின் போராட்டம் உச்ச கட்டத்தை அடைந்தபோது—1973 என்று நினைக்கிறேன்—குண்டர்களால் தாக்கப்பட்டு மயிரளவில் அவருடைய உயிரை பாதுகாக்கிற நேரத்தில், அன்றைக்கு அவரை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்கிறபோது இன்றைக்கு முதலமைச்சராக இருக்கக்கூடிய நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓடோடிச் சென்று டாக்டர்களை எல்லாம் பார்த்தார்கள். தொழிலாளி வர்க்கத்தினுடைய தலைவன், தனக்கு என்று எதையும் தேடி வைத்துக்கொள்ளாத உழைப்பாளி, தன்னலம் கருதாத மக்களின் தலைவனுடைய உயிரைப் பாதுகாக்கவேண்டும் என்பதற்காக நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், திரு. கல்யாணசுந்தரம் போன்றவர்களும் துடிதுடித்துச் சென்று அவருடைய உயிரைப் பாதுகாப்பதற்காக உதவினார்கள். அவர் இங்கே சட்டமன்றத்திற்கு சட்டமன்ற உறுப்பினராக வந்தபிறகும்கூட எந்த லட்சியக் கண்ணோட்டத்தோடு எந்த மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்களோ அப்படியே சட்டமன்றத்திலும் பணியாற்றி, ஒரு பச்சிளம் குழந்தை எப்படி சிரித்து, இன்பத்தோடு விளையாடுமோ அதுபோல், எவ்வளவுதான் கோபக் குறிகள் வந்தாலும்கூட சிரித்த முகத்துடனே பேசி, தன்னுடைய பேச்சு முழுவதையும் அமைச்சர்கள் கூர்ந்து கவனிக்க வைத்து, அவர்களைப் பதில் தர வைக்கக்கூடிய அளவுக்கு திறமையுடனும், சிறந்த அனுபவத்துடனும் பணியாற்றினார்கள்.

தோழர் வி.பி.சி. அவர்களை இழந்திருப்பது என்பது உண்மையிலே தொழிலாளி வர்க்கத்திற்கு ஒரு பேரிழப்பு. எத்தனையோ தொழிலாளர் தலைவர்கள் இருக்கிறார்கள். இருந்தாலும்கூட திரு. வி.பி.சி. அவர்களைப் பொறுத்தவரையில் இவ்வளவு வயது முதிர்ந்து நோய் அதிகமாக இருக்கும் நிலையிலேகூட 24 மணி நேரமும் அந்தத் தொழிலாளி வர்க்கத்தினருக்காகவே அவர்களோடு ஒன்றி இணைந்து பாடுபட்டு வந்தார். அந்த அளவுக்கு பாடுபடக் கூடிய ஒரு தொழிற்சங்கத் தலைவரைப் பார்ப்பது என்பது மிக அரிது. அவரை இழந்து தவிக்கின்ற அவருடைய ஒரே மகன் பற்றிக்கூட இன்று காலையில் தான் கேள்விப்பட்டேன். அந்தப்பையன் கூட நீங்கள் இங்கே இருக்கிறபோதே எனக்கு ஒரு வேலைக்கு ஏற்பாடு பண்ணக் கூடாதா என்று கேட்டபோது, அவர் சொன்ன பதில் நான் நேராகக் கேட்கவில்லை. இன்றைக்குக் காலையிலேதான் என்னிடத்திலே சொன்னார்கள்—நீ படிப்பது வேலை தேடிக்கொள்வது எல்லாம் உன்னுடைய சாமர்த்தியம்தான், என்னை நம்பி நீ வாழக் கூடாது என்று தன்னுடைய மகனுக்கு அறிவுரை சொல்லியிருக்கிறார்கள். இப்படி யாராக இருந்தாலும் தனிப்பட்ட ஒருவருக்கு உதவி செய்வதைவிட ஒரு சமுதாயக் கண்ணோட்டத்தோடு உதவி செய்யவேண்டும் என்ற ஒரு நீண்ட பாரம்பரியம் உள்ளவர் தோழர் வி. பி. சி. அவர்கள். அவர்

இன்றைக்கு நம்மை விட்டுப் பிரிந்திருந்தாலும் கூட அவர்களுடைய லட்சியமும், கொள்கைப் பிடிப்பும்—அதாவது எப்படி சோவியத் நாட்டைப் போன்று இந்தியாவும் வளர வேண்டுமென்று 1969 வரையில் பாடுபட்டாரோ அந்த லட்சியம் இந்தியாவில் மலர வைப்பதற்குரிய சாத்தியக்கூறை உருவாக்குவதற்கு பாடுபடுவது என்பதுதான் நாம் அவருக்குச் செய்ய வேண்டிய கடமை. எந்த லட்சியத்திற்காகத் தன்னை அவர்கள் அர்ப்பணித்துக் கொண்டார்களோ அந்த லட்சியத்தைத் தமிழகத்திலும் ஏற்படுவதற்குரிய வகையில் நாம் அனைவரும் சபதம் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு மறைந்த திரு. வி.பி.சி. அவர்களுக்குத் தலைவணங்கி அஞ்சலி செலுத்தி அவரைப் பிரிந்து வாடுகின்ற அவருடைய குடும்பத்தினருக்கும் என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்து அமர்கிறேன்.

*திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையிலே உறுப்பினராக பணி ஆற்றிக் கொண்டிருந்த மரியாதைக்குரிய வி.பி. சிந்தன் அவர்கள் உலகத்தொழிலாளர் தினமான மே தின விழாவிலே கலந்து கொள்வதற்காக ரஷ்ய நாட்டின் அழைப்பை ஏற்று அங்கே சென்று அந்த விழாவிலே நிறைவாக கலந்து கொண்டு திரும்பக் கூடிய ஒரு சூழ்நிலை இருந்த சந்தர்ப்பத்திலே இறைவனின் நாட்டப்படி இறைவனின் அடி சேர்ந்து விட்டார்கள். தோழர் வி. பி. சிந்தன் அவர்களோடு எனக்கு குறுகிய காலம் பழக்கமாக இருந்தாலும், சட்டமன்ற விடுதியிலே அவருடைய அறையிலேயே சந்தித்து பேசக் கூடிய ஒரு வாய்ப்பைப் பெற்றவன். எப்பொழுதும் எளிமையான முறையிலே எந்தக் கேள்வியைக் கேட்டாலும் அதற்கு நமக்கு விளங்கக் கூடிய அளவுக்கு கருத்துக்களைச் சொல்லக் கூடிய ஒரு நல்ல மனம் படைத்த இனிய நண்பர் இன்று நம்மிடம் இல்லை. ஆனால் தன்னுடைய கருத்தை எந்த நேரத்திலும் எந்த சந்தர்ப்பத்திலும் துணிவோடு, அதே நேரத்தில் பணிவோடு எடுத்துச் சொல்லக் கூடிய ஒரு பண்பாளர்.

அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட வில்லிவாக்கம் தொகுதி சம்பந்தப்பட்ட சில விஷயங்களை அவரோடு கலந்து உரையாற்றக் கூடிய ஒரு சந்தர்ப்பத்தை பெற்ற நேரத்திலே, அந்தத் தொகுதி மக்களுக்காக, அதுவும் பிற்படுத்தப்பட்ட சிறுபான்மையினர் நிறைந்த அந்தத் தொகுதி மக்களுக்காக அவர் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை பல முறை அவர்கள் மூலம் தெரிந்து கொண்டிருக்கிறேன். அப்படி எந்தச் சந்தர்ப்பத்திலும் தனக்காகவோ எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல தன் குடும்பத்திற்காகவோ இல்லாமல் நாட்டு மக்களுக்காகவும் குறிப்பாக தொழிலாளர் வர்க்கத்திற்காகவும் தன்னுடைய வாழ்நாளை அதிகமாக செலவு செய்து அதற்காவே பாடுபட்டு, அந்த





தொழிலாளர் தினமான மே தின விழாவிலே கலந்து கொள்வதற்காக சென்றிருந்த நேரத்திலே அவர்கள் மறைந்திருக்கிறார்கள். இந்தச் சந்தர்ப்பத்திலே அவர் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்த தொகுதியின் சார்பாக பல கருத்துக்களைக் கோரிக்கைகளை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்த மக்கள் அவரை எப்போதும் நினைவு கூறத் தக்க வகையில் அந்த கோரிக்கைகளை நிறைவேற்றித் தந்தால் மிகவும் நன்றி உடையவர்களாக இருப்பார்கள் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்வதோடு அவரை பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கும், அவர் சார்ந்துள்ள கட்சிக்கு முன்னவர் அவர்கள் முன் மொழிந்த தீர்மானத்தை ஒட்டி நான் சார்ந்துள்ள இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் சார்பாக என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்து நிறைவு செய்கிறேன், வணக்கம்,

திரு. சே. முத்துவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய, மார்க்சிஸ்ட் கட்சியினுடைய தமிழ் மாநில உறுப்பினரும், சி. ஐ. டி. யு. வின் தமிழ் மாநில உறுப்பினரும், வில்லிவாக்கம் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினருமாகிய அமரர் தோழர் வி. பி. சிந்தன் அவர்கள் நேற்றைய தினம் சோவியத் நாட்டில் உள்ள வால்கா கிரேட் நகரத்தில் மாரடைப்பால் காலமான செய்தியைக் கேட்டு நாமெல்லாம் மிகவும் ஆழ்ந்த அனுதாபத்தில் இருக்கிறோம். வி. பி. சிந்தன் அவர்கள் ஒரு சிறந்த அரசியல்வாதி, சிந்தனாவாதி, தொழிற்சங்கவாதி என்பதோடு திறமையான சட்டமன்ற உறுப்பினரும் ஆவார். அவர் மிகவும் எளிமையாகவும் ஒரு சிறந்த பார்லியமெண்டேரியனாகவும் விளங்கியவர் என்பது இந்த சட்ட மன்றத்தில் அவர் ஆற்றிய உரையிலிருந்தும் எடுத்துக் கொண்ட முயற்சியிலிருந்தும் நன்கு அறியலாம். அப்பேர்ப்பட்ட சிந்தன் அவர்கள் இளமைப் பருவத்திலேயே இந்த நாட்டின் சுதந்திரத்திற்காக சிறையிலே இருந்திருக்கிறார்கள். சுதந்திரத்திற்குப் பிறகு தொழிலாளர்களுக்காக, அதுவும் வறுமை கோட்டிற்கு கீழே வாழ்கின்ற தொழிலாளர்களுக்காக 6 ஆண்டுக்காலம் சிறையிலே வாழ்ந்திருக்கிறார்கள்.

ஒரு சில நாட்களுக்கு முன்பு இந்த அவையிலே சிறைச்சாலை பற்றிய மானியத்தில பேசும்போது அந்த சிறைச்சாலையில் இருக்கிற ஒழுக்கக் கேடுகளை அவர் சிறையிலிருந்த அனுபவத்தின் வாயிலாகவே தெளிவாக எடுத்துக் கூறி விளக்கியிருக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட சிந்தனையாளரை இழந்து இன்று இந்த தமிழகத்தில் இருககிற அத்தனை பேரும் குறிப்பாக எல்லா தொழிற் சங்க இயக்கங்களும், தொழிலாளர்கள் அத்தனை பேரும் ஆழ்ந்த அனுதாபத்தில் இருக்கிற இந்த நாளில் நான் சார்த்திருக்கிற அனைத்திந்திய ஃபார்வேர்டு பிளாக் கட்சியின் சார்பில் எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் வருக்தத்தையும் அவரது குடும்பத்தினருக்கும்,

அவர் இருந்த கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சிக்கும் தெரிவித்து நம்முடைய அவை முன்னவர் அவர்கள் கொண்டு வந்த இரங்கல் தீர்மானத்தில் எனது இயக்கத்தையும் இணைத்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

(முற்பகல் 10–50)

**திரு. வை. பாலச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் காலையில், வி.பி.சி. என்று நாட்டுமக்களால் அன்பாக அழைக்கப்படுகிற திரு. வி. பி.சிந்தன் அவர்கள் இயற்கை எய்தினார் என்று வானொலியில் கேட்டபோது எங்களுடைய நெஞ்சமெல்லாம் ஒரு சில நிமிடங்களுக்கு வெடித்து விடுவதைப் போல இருந்தது. குறுகிய காலமே அவரோடு பழகுகிற வாய்ப்பைப் பெற்ற எங்களுக்கே இந்த நிலைமையென்றால், அவர்களை இழந்துத் தவிகதுக் கொண்டிருக்கிற அவருடைய குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கும், மரியாதைக்குரிய திரு. ரமணி போன்றவர்களுக்கும், அவர்களுடைய இயக்கத்தைச் சார்ந்தவர்களுக்கும் எந்த அளவிற்கு வேதனை இருக்கும் என்பதை நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. எனவே அவர்கள் எல்லாம் இந்த இறப்பைத் தாங்குகிற மனவலிமையைப் பெறுவதற்கு இந்த நேரத்தில் நான் ஆண்டவனைப் பிரார்த்திதுக் கொள்கிறேன்.

பொதுவுடைமைக் கொள்கையை ஏற்றுக் கொண்ட தோழர் வி. பி. சிந்தன் அவர்கள் பொதுவுடைமைப் பூங்கா என்று வர்ணிக்கப்படுகிற ரஷ்ய நாட்டில் இயற்கை எய்தினார் என்ற செய்தியைக்கேட்ட போது அந்தக் கொள்கை மீது அவர்கள் எந்த அளவிற்கு பற்றும், அக்கறையும் கொண்டிருந்தார் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. நான் இந்த சட்டமன்றத்திற்கு வந்த நேரத்தில் ஒரு சில கருத்துக்களை வேகமாகச் சொல்லுகிறபோது ஒரு நாள் அவர் என்னை தனியே அழைத்து வைத்து எனக்கு ஒரு அறிவுரையைச் சொன்னார்கள். எந்த சிறிய விஷயமாக இருந்தாலும் அதைக் கடுமையான முகத்தோடு, வேகமான பேச்சோடு சாதிக்க முடியாது. ஆனால் எந்த அளவிற்கு பெரிய விஷயமாக இருந்தாலும் அதைப் புன்முறுவலோடு, பிறர் மனம் புண்படாத வகையில் சொல்வதால வெற்றி பெற முடியும். ஆகவே அந்தப் பழக்கத்திற்கு மாற்றிக் கொள்ள வேண்டுமென்று அறிவுரை வழங்கினார்கள். அந்த அறிவுரை இன்றைக்கும் என் மனதில் பசுமையாக இருந்து கொண்டிருக்கிறது. நாடு விடுதலைப் பெற வேண்டுமென்பதற்காக அவர் சிறைச்சாலையில் தவம் இருந்தார். விடுதலை பெற்ற நாட்டில் உழைக்கிற மக்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்காகவும் அவர் சிறையில் தவமிருந்தார். அப்படி சிறைச்சாலையில் பல்லாண்டுக்காலம் தவமிருந்த அவர் இன்றைக்கு இயற்கை எய்தியிருக்கிறார். அவருடைய இழப்பால் வாடிக்கொண்டிருக்கிற அந்த இயக்கத்தைச் சார்ந்த தோழர்களுக்கும், அவரின்





குடும்பத்தாருக்கும் நான் சார்ந்திருக்கிற இந்து தேசப் பேரியக்கத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் தெரிவித்து மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற தீர்மானத்தை வழிமொழிந்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு பேரவை
முன்னவர் அவர்களும், அனைத்துக் கட்சித் தலைவர்களும் தெரி
வித்த இரங்கல் கருத்துக்களுடன் என்னுடைய ஆழ்ந்த இரங்
கலையும் மறைந்த மாண்புமிகு உறுப்பினரின் குடும்பத்தினருக்
குத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. வி. பி. சிந்தன் அவர்கள்
ஒரு பழுத்த தொழிற்சங்கத் தலைவர். பல தொழிற்
சங்கங்களில் ஈடுபட்டு தொழிலாளர்களுக்கு அயராது உழைத்
தவர் ஆவார்கள். பழகுவதற்கு மிகவும் இனிமையானவர்.
கடந்த இரண்டாண்டுக் காலம் நான் அவருடன் நெருங்கிப்
பழகக்கூடிய வாய்ப்பைப் பெற்றேன். சாதாரண மக்களுக்காக
அவர்கள் இந்த மாமன்றத்தில் உரையாற்றியவர்கள் ஆவார்கள்,
தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தான் மாண்புமிகு உறுப்
பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து
நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் நிறைவேற்றப் பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மறைந்த திரு. வி. பி. சிந்தன் அவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் ஒத்திவைக்கப் பெறுகின்றன.

நாளை மறுதினம் (11–5–1987) காலை 10–00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை முற்பகல் 10–53 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

### 3. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

#### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

106. 1984–85 ஆம் ஆண்டிற்கான தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் இருபதாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

107. 1984–85 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின் வாரியத்தின் ஆண்டுக் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை [1949 ஆம் ஆண்டு மின் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 69(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது])

#### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

227. 1985–86 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டைச் சார்ந்த மாநில பொதுத் துறை நிறுவனங்கள் பற்றிய ஆய்வுரை (ஆங்கிலம்).

228. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை).

229. கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் அளித்துள்ள எழுத்து மூலமான சொத்து விவரங்கள் (தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 27–8–1969 ஆம் தேதியன்று ஏற்பளித்த தீர்மானத்தின்படி பேரவையில் வைக்கப் பெற்றது).

30–3–1985 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர்கள்

1. திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர்
2. டாக்டர் த. முகம்மது சலீம்

31–3–1986 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர்

திரு. கு. ரமணி

[illegible]–1987 ஆம் தேதியன்று உள்ளவாறு அளித்துள்ளவர்

திரு. [illegible]. ஜி. ஆறுமுகம்.

78297
D 1
V211,31 N87
N87-43-4